Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

நவீன நாகரிக - நங்கையினரின் மனம் நறைந்த

சிறி கருமாரி நகையகம்

நயம் - நாணயம் - உத்தரவாதம்

தற்போது புதுப்பொலிவுடன்

இல.205/6, கஸ்தூரியார் வீதி,

(ராஜா தியேட்டர் கட்டடத்தில்)

யாழ்ப்பாணம். T.P: 222 5385

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 மாசி - 22 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 முஹர்ரம் 24 (06.03.2005) ஞாயிற்றுக்கிழமை இதழ்: 157

## யாழ். குடாநாட்டில் மக்கள் மீதான

# ராணுவ வன்முறைகள் பாரதூரமானவை;


# நோர்வே தூதுவரிடம் புலிகள் தெரிவிப்பு!

(கிளிநொச்சி)

யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவி ஒருவர் நேற்றுமுன்தினம் இராணுவ வாகனம் மோதி உயிரிழந்த சம்பவம் - மற்றும் அதைத் தொடர்ந்து பொதுமக்கள் மீது படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் ஆகியவற்றை தாம் பாரதூரமான விடயங்களாகக் கருதுவதாக நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரிடம் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் தெரிவித்தார்.

நேற்றுக்காலை ஹெலிகொப்டர் மூலம் கிளிநொச்சி வந்தடைந்த நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் தலைமையிலான தூதுக்குழுவுக்கும், அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினருக்கும் இடையில் சமாதான செயலகத்தில் காலை

(12 ஆம் பக்கம் பார்க்க)



## மட்டக்களப்பு - கிருமிச்சையில்

# இராணுவத்தினர் தாக்கியதில் போராளி ஒருவர் உயிரிழப்பு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் இராணுவத்தினர் மேற்கொண்ட பதுங்கித் தாக்குதலில் வீரவேங்கை புஸ்பராசா (வாழைச்சேனை) எனும் போராளி வீரச்சாவடைந்துள்ளதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இந்தத் தாக்குதல் சம்பவம் கிருமிச்சைப் பாதை 2 ஆம் கட்டை எனுமிடத்தில் இடம் பெற்றுள்ளது.

தாக்குதல் நடைபெற்ற பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமாகும். இங்கு போராளிகள் தங்குவது வழமையாகும். கஜிவத்தை படைமுகாமிலிருந்த படையினர் 2

(12 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்



# வெலிக்கந்த பிரதேசத்தில் பாரிய தேடுதல் வேட்டை!

(பொலனறுவ)

பொலனறுவ மாவட்டத்திலுள்ள வெலிக்கந்தப் பகுதியில் ஊடுருவியதாகக் கூறப்படும் பிஸ்டல் குழுவினரைத் தேடி - படையினர் பெருமெடுப்பிலான திடீர் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

வெலிக்கந்தவுக்கும் பொலனறுவவுக்கும் இடையிலுள்ள செவனப்பிட்டிய பகுதியிலேயே இந்தத் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. நேற்றுக்காலை 10 மணியளவில் ஆரம்பிக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கை, பிற்பகல் 2 மணிக்குப் பின்னரும் தொடர்ந்து இடம்பெற்றதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரி வித்தன.

பிஸ்டல் குழு உறுப்பினர்கள் சிலர் செவனப் பிட்டிய பகுதியில் இலக்கொன்றை குறிவைத்து ஊடுருவியிருப்பதாக தமக்குக் கிடைத்த தகவலை அடுத்தே - திடீரென தாம் இந்தத் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டதாக படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தத் தேடுதல் நடவடிக்கையில் நூற்றுக்கணக்கான படையினர் ஈடுபட்டதாகத் தெரியவருகிறது.

# உள்முரண்பாடு உச்சக்கட்டத்தில் பிளவுபடும் நிலையில் ஈ.பி.டி.பி

## இணையத்தளம் தகவல்

(கொழும்பு)

ஈ.பி.டி.பி. அமைப்புக்குள் உள் முரண்பாடுகள் தீவிரமடைந்து கட்சி பிளவுபடும் நிலையில் இருப்பதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

இந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

ஈ.பி.டி.பி அமைப்பிற்குள் கடந்த ஒரு வருடமாக நிலவிவந்த உள்முரண்பாடுகள் வலுவடைந்து உச்சக்கட்டத்தை அடைந்துள்ளன. இந்த உள் முரண்பாடுகள் கடந்த 10.02.2005

# யாழ்ப்பாண சிறுவன் கடற்படையால் கைது!

(கொழும்பு)

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமாகும். இங்கு

## விண்ணாணம் விநாசியர்



பொறுத்திருந்தா இன்னும் எத்தனை சங்கதிகள் அம்பலத்துக்கு வரும்....

(கொழும்பு)

ஈ.பி.டி.பி. அமைப்புக்குள் உள் முரண்பாடுகள் தீவிரமடைந்து கட்சி பிளவுபடும் நிலையில் இருப்பதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

இந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது –

ஈ.பி.டி.பி அமைப்பிற்குள் கடந்த ஒரு வருடமாக நிலவிவந்த உள்முரண்பாடுகள் வலுவடைந்து உச்சக்கட்டத்தை அடைந்துள்ளன. இந்த உள் முரண்பாடுகள் கடந்த 10.02.2005 தொடக்கம் பெரிய அளவில் கிளம்பியுள்ளன.

டக்ளஸ் தேவானந்தா தலைமையில் ஒரு அணியினராகவும் கலாநிதி விக்னேஸ்வரன் தலைமையில் இன்னொரு அணியினருமாக இரண்டு அணிகளாக ஈ.பி.டி.பி தொழிற்பட ஆரம்பித்துள்ள இந்த நிலையில், மிகவிரைவில் இவை சட்டப்படியான ஒரு கட்சியாக மாறவும் வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

டக்ளஸ் தேவானந்தாவைத் தலைமையாக ஏற்றுக்கொண்டு கிருபன், வின்சன், ஸ்ராலின், தயா, மகேஸ்வரி வேலாயுதம், சந்துரு, அருமைநாயகம் என்று ஒரு குழுவினரும் –

விக்னேஸ்வரன் தலைமையினை ஏற்று டக்ளஸ் தேவானந்தாவுக்கு எதிராக சங்கர், கரி சந்திரா, மகாநந்தன் றஞ்சினி, மணிபல்லவராஜன் ஆகியோரும் செயற்பட ஆரம்பித்துள்ளனர். இரு தரப்பினரும் ஒருவரை ஒருவர் தொடர்ச்சியாக விமர்சித்து வரும் நிலையில் இவர்களின் உட்கட்சி மோதல் ஆயுதங்களைப் பயன்படுத்தும் அளவிற்கு உச்சக்கட்டத்தை அடைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவித் தொகையில் ஒரு மில்லியன் ரூபாவினை கலாநிதி விக்னேஸ்வரன் சுருட்டியுள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

தெரியவருகிறது.

## யாழ்ப்பாண சிறுவன் கடற்படையால் கைது!

(கொழும்பு)

கடற்படைத் தலைமையக பிரதான வாசலுக்கு முன்பாக சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடியதாகத் தெரிவித்து யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 14 வயதுச் சிறுவன் ஒருவனைக் கடற்படையினர் கைது செய்தனர்.

நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்ட இந்தச் சிறுவன் கொக்குவில் வடக்கைச் சேர்ந்த பார்வதன் எனப்படும் வேலுதாஸ் கோபி எனத் தெரிய வருகிறது.

இந்தச் சிறுவன் மேலதிக விசாரணைகளுக்காக கடற்படையினரால் கொழும்புத் துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

## ஆயுதக்குழு உறுப்பினர் ஒருவர் மட்டக்களப்பில் சுட்டுக்கொலை!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வந்தாறுமூலையில் படையினருடன் இணைந்து செயற்படும் ஆயுதக் குழுவொன்றின் உறுப்பினர் எனக்கூறப்படும் தமிழ் இளைஞர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்றுக்காலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மயில்வாகனம் புலேந்திரன் (வயது–26) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவரா

(12 ஆம் பக்கம் பார்க்க)

## போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் ஏற்பாட்டில்

# படையினர் – பொலிஸார் – புலிகள் யாழ்.நகரில் நேற்று சந்தித்து பேச்சு!

(யாழ்ப்பாணம்)

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டில் நேற்று இராணுவ பொலிஸ் அதிகாரிகளுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடந்த சந்திப்பில் – நேற்றுமுன்தினம் யாழ்.நகரில் பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் குறித்து விடுதலைப் புலிகள் கண்டனம் தெரிவித்தனர்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்புக்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்டத் தலைவர் றொனி பேர்சன் தலைமை தாங்கி

(12 ஆம் பக்கம் பார்க்க)

*ஐரோப்பிய யூனியனின்*

## வெளிவிவகார ஆணையாளர் வன்னிக்கு வரவிருப்பம்!

(கொழும்பு)

இலங்கைக்கு வரவுள்ள ஐரோப்பிய யூனியனின் வெளிவிவகார மற்றும் அயல்நாடுகளின் கொள்கை வகுப்பாளர் பெனிற்றா பெரேரோ வோல்ட்னர் கிளிநொச்சி சென்று விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளைச் சந்திப்பதற்கு இலங்கை அரசாங்கத்தின் அனுமதியை கோரியுள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

UNIT
Compaq PIII கணனிகள் மொனிற்றருடன் just Rs. 31000/-முதல் 1 வருட உத்தரவாதம்
PIV 2.4 Complete கணனிகள் மொனிற்றருடன் @ Colombo based price
3 வருட பூரண உத்தரவாதம்
வதந்திகளை நம்பி உங்கள் பணத்தை வீணடிக்காதீர்கள்
சகல கணனி உதிரிகளும் கொழும்பை ஒத்த விலையில்
347, K.K.S. Road, Manohara Theatre Junction, Jaffna.
நாங்கள் வரண்டியில்லாப் பொருள் எதுவும் விற்பதில்லை
Possible which impossible

# மாணவர் பேரவை மீதான தாக்குதல்; கண்காணிப்புக்குழுவிடம் முறைப்பாடு!

நேற்றுமுன்தினம் மதியம் 2 மணியளவில் தமது அலுவலகத்துக்குள் நுழைந்த இராணுவத்தினரும், பொலிஸாரும் தாக்குதலை மேற்கொண்டதாக சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை யினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவிடமும் மனித உரிமை ஆணைக்குழுவிடமும் முறையிட்டதை தொடர்ந்து போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினரும் மனிதஉரிமைஆணைக்குழு அதிகாரிகளும் அலுவலகத்துக்கு வந்து சேதங்களைப் பார்வையிட்டனர்.

அத்துடன் நாடாளுமன்ற உறுப்பினர்களான பத்மினி சிதம்பரநாதன், சிவாஜிலிங்கம், ஈழவேந்தன், சிவநேசன் ஆகியோரும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஊழியர்கள்,மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் உட்பட பல்வேறு தரப்பினரும் அலுவலகத்தைப் பார்வையிட்டதாகவும் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை தெரிவித்துள்ளது.

# கோழிகளுக்கு தடுப்பு மருந்தேற்ற அரியாலையில் நடவடிக்கை!

அரியாலை பிரதேசத்தில் கோழி வளர்ப்போரின் நலனைக் கருத்திற் கொண்டு – இம்மாத இறுதிக்குள் கோழிகளுக்கான தடுப்பு மருந்து இலவசமாக வழங்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனவே, கோழிவளர்ப்பில் ஈடுபட்டுள்ளோர் தமது கோழிகளுக்கு தடுப்பு மருந்தினைப் பெறவிரும்பின். அரியாலையிலுள்ள கமநல சேவைகள் உப அலுவலகத்தில் செவ்வாய், வியாழன் ஆகிய இரண்டு தினங்களிலும் பிற்பகல் 2 மணி தொடக்கம் 4 மணிவரை பதிவைமேற்கொள்ளலாம். தடுப்பு மருந்து வழங்கப்படும் திகதி பின்னர் அறி விக்கப்படும்.

அத்துடன் – ஆடு, மாடு வளர்ப்போரும் அவை தொடர்பான பிரச்சினைகளை மேற்படி இரு தினங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்தில் கால்நடைவைத்தியரிடம் தெரிவித்து, ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளலாமெனவும் அரியாலை விவசாய சம்மேளனம் தெரிவித்துள்ளது.

# மீண்டும் மணல் விநியோகம்!

(யாழ்ப்பாணம்)

சுனாமி அனர்த்தம் காரணமாகத் தடைப்பட்டிருந்த கட்டடத்தேவைக்கான மணல் விநியோகம் மீண்டும் முன் னர் போல் வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனத்தின் புலோலி உபயகதிர்காமத்திலுள்ள அலுவலகத்தினால் நாளை திங்கட்கிழமை தொடக்கம் விநியோகிக்கப்படவுள்ளது.

மணல் கொண்டு செல்வதற்கான வழி அனுமதிப்பத்திரம் முன்னர் போன்று வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபரின் தும்பளை – பருத்தித்துறையிலுள்ள உப பணிமனையால் வழங்கப்படும். மணல் தேவைப்படுவோர் மேற்குறித்த இரு பணிமனைகளுடனும் தொடர்பு கொண்டு மணலைப் பெற்றுக்கொள்ளலாம்.

மீள்குடியமர்த்தல் புனர்வாழ்வு புனரமைப்பு மீள்கட்டுமான அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொண்டுள்ள நிறுவனங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் குறித்த நிறுவனத்தினால் மணல் வழங்கப்படும்.

இவற்றுக்கு அரசாங்க அதிபரின் சிபாரிசு தேவையில்லை என அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

## யாழ்.பல்கலைக்கழகத்தில் சமகால அரசியல் கருத்தரங்கு

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் "இலங்கையின் சுனாமிக்குப் பின்னரான அரசியலும் சர்வதேச அரசுகளின் அணுகுமுறைகளும்" எனும் தலைப்பிலான சமகால அரசியல் கருத்தரங்கு இன்று மாலை மூன்று மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த கருத்தரங்கை யாழ். பல்கலைக்கழக அரசியல் சமூகவியல் துறை விரிவுரையாளர் கே.ரி.கணேசலிங்கம் நிகழ்த்தவுள்ளார்.

## கூட்டம் பிற்போடப்பட்டது!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரனின் கட்டப்பிராய் அலுவலகத்தில் – இன்று நடைபெறவிருந்த கோப்பாய் தொகுதி அபிவிருத்தி தொடர்பான கூட்டமும், நிகழ்கால அரசியல் நிலை தொடர்பான கலந்துரையாடலும் தவிர்க்க முடியாத காரணத்தால்பிற்போடப்பட்டுள்ளதாகவும், எனவே இந்தக் கூட்டம் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்மெனவும் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன்தெரிவித்துள்ளார்.

## வியாபார அபிவிருத்தி நிலைய வடபிராந்திய கிளை திறப்பு!

(யாழ்ப்பாணம்)

இலங்கை வியாபார அபிவிருத்தி நிறுவனம் தனது வடபிராந்தியத்துக்கான வியாபார அபிவிருத்தி நிலையத்தை நாளை மாலை 3 மணியளவில் கோவில் வீதி யாழ்ப்பாணத்தில் திறந்துவைக்கவுள்ளது.

இலங்கை வியாபார அபிவிருத்தி நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் செல்வி றொஹாந்தி பெரேரா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் அரசாங்க அதிபர் கே.கணேஸ் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு அலுவலகத்தைத் திறந்துவைக்கவுள்ளார்.

# தமிழ் திரைப்படத் துறையை விருத்திசெய்ய நடவடிக்கை!

(யாழ்ப்பாணம்)

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ப் பிரிவு இலங்கையில் தமிழ்த் திரைப்படத் துறையை விருத்திசெய்யும் முகமாக பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்துள்ளது.

இது தொடர்பாக பத்திரிகையாளர்களுக்கு விளக்கம் அளிக்கும் மாநாடு நேற்று யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெற்றது.

இதில் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ப் பிரிவுக்குப் பொறுப்பான தேவதாஸன், யாழ். பிரதேசசெயலர் எஸ்.செந்தில்நந்தனன், யாழ். மத்திய கல்லூரி அதிபர் இராசதுரை ஆகியோர் கலந்து கொண்டு விளக்கமளித்தனர்.

இலங்கை தேசிய திரைப்பட கூட்டுத்தாபனம் நாடளாவிய ரீதியில் திரைப்படத் துறையை முன்னெடுத்து வரும் நோக்கில் நாட்டின் பல பாகங்களிலும் இது சம்பந்தமான நிகழ்ச்சிகளை முன்னெடுத்து வருகிறது.

அந்த வகையில் யாழ்ப்பாணத்திலும் இது முன்னெடுக்கப்படவுள்ளது.

இலங்கையில் திரைப்படத் துறையை மீளமைக்கும் நோக்குடன் "திரைதூது" எனும் சினிமா சம்பந்தமான மாதாந்த பத்திரிகை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

வடக்கு–கிழக்கில் திரைப்பட ஈழகம் ஒன்றை நிறுவுதல், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தென்றல் சேவையில் இரண்டுமணிநேர இலங்கை சினிமா சம்பந்தமான நிகழ்ச்சியை ஒலிபரப்புதல் போன்ற திட்டங்கள் ஏற்படுத்தப்படவுள்ளன.

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு 28 – 11 – 1949

உதிர்வு 02 – 03 – 2005

அமரர்

## பொன்னம்பலம் சின்னத்துரை

(கபிலா காலணியக உரிமையாளர்)

கற்கள் படாமல் – பாதங்களில்
முட்கள் படாமல்
சொற்களில் எழில்துலங்க
பாதணிகளை கரங்களில் திணிக்கும்
கபிலா பாதணியகத்தின் திலகமே...!

மனம் நோகாமல் மற்றவர்
குணம் தெரிந்து செயலாற்றி
தினம்வரும் வறியோர்க்கு ஈயும்
கனவான் நீ, கண்கலங்க வைத்துவிட்டாய் இன்று!

வலக்கரம் கொடுப்பதை இடதுகையறியாது
வலுவிழந்தோர் நோயுற்றோர்க்கெல்லாம்
மனமுவந்து வாரி வழங்கும் பாரி நீ
யாரையினி உனைப்போல் காண்பதிங்கே...!

யுத்தகளத்தில் போர் வீரன் போல்
வாழ்வெல்லாம் போராடிப் போராடி
அத்தனை போர்களையும்
சிந்தனையோடும் சிரிப்போடும் நின்று ஜெயித்தவன் நீ.

எழுந்து நிற்க நீ ஆடிய யுத்தத்தில்
சொரிந்துபோன உதிரமும் வியர்வையும்
உதிர்ந்துபோன உன் மூச்சில்
நிலைத்து நிற்கும் உன் சுவடுகள்....

நல்லூர்,
யாழ்ப்பாணம். (C/3872)

போஸ்கோ காகிதாதியாளர்கள்.
போஸ்கோ ஆட்ரோன் பிறிண்டேர்ஸ்.


மனோகரா திரையரங்கு
இளைய தளபதி விஜய், நதிஷா, ரவிகிருஷ்ணா நடித்த

சு★க்★ர★ன்
யாழ்ப்பாணம்
(சி-3858)
கா.நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

நாகம்ஸ் சுன்னாகம்
விஜய், திரிஷா நடித்த

திருப்பாச்சி
(சி-3860)
கா.நே. 11.00, 3.00, 7.00, 10.00

நிறைஞ்சனாஸ் சங்கானை
ஜெயம் ரவி அசின் நதியா பிரகாஷ்ராஜ் நடித்த
M.குமரன் son of.மகாலட்சுமி
(சி-3856)
கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

நாதன்ஸ் யாழ்ப்பாணம் குளிரூட்டப்பட்டது
5.3.2005 முதல் மூன்று தினங்கள் மட்டும்
அர்ஜுன், சிம்ரன் மனோரமா, வடிவேல் நடித்த
ஒற்றன்
கா.நே(பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30
எமது அடுத்த வெளியீடு
தாவடி மைந்தன் நடிக்கும்
குருதேவா
(சி-3857)

ராஜா யாழ்ப்பாணம்
சிம்பு (இரு வேடம்), ஜோதிகா கவுண்டமணி நடித்த
மன்மதன்
(சி-3859)
கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30


## வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனம் மணல் விநியோக அறிவித்தல்

தனியார் தேவைகளுக்கான மணல் விநியோகம் 07.03.2005 தொடக்கம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

மணல் அனுமதிப்பத்திரம் பெற்றவர்கள் உபயகதிர்காமத்தில் (புலோலி) அமைந்துள்ள எமது அலுவலகத்துடன் தொடர்புகொண்டு, புதிய திகதிகளைப் பெற்று மணலைப் பெற்றுக்கொள்ள முடியும்.

உபயகதிர்காமம்,
புலோலி. (C/3871)

நிர்வாகம்.


2nd HAPPY BIRTHDAY
இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து
கோண்டாவில் தில்லையம்பதியைச் சேர்ந்த
குகேந்திரன் சுகிதா
தம்பதிகளின் செல்வப் புதல்வி
சுவேதா

தனது 2வது பிறந்தநாளை இன்று (06.03.2005) ஞாயிற்றுக்கிழமை தனது இல்லத்தில் கொண்டாடுகிறார். செல்வி சுவேதாவை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, கனடாவில் வசிக்கும் குகன் பெரியப்பா, ராஜி பெரியம்மா, கிரேனியா அக்கா,லண்டனில் வசிக்கும் குகதாசன் சித்தப்பா, ஆவரங்காலில் வசிக்கும் அம்மப்பா, அம்மம்மா, தயாபரன் மாமா, கார்த்திபன் மாமா, பிரகாஸ் மாமா, தாரகை அன்ரி மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் சுவேதாவை கோண்டாவில் தில்லையம்பதியாளின் அருள்பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

செல்வி சுவேதா
06.03.2005
தில்லையம்பதி கோண்டாவில்
திரு.திருமதி குகேந்திரன்

அதிநவீன முறையிலான நிறம் பிரித்தல் சேவையினை
(Positive - Colour Separation)
பெற்றிட
KUNA
Digital Imaging & Digital Printing
யாழ்.சாலை, கிளிநொச்சி.
யாழ்.நகரில் நீங்கள் நாடவேண்டிய இடம்
சுரபி பதிப்பகம்
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
24 மணிநேரமும் சுரபி பதிப்பகத்தின் சேவையைப் பெற்றுக்கொள்ளலாம்.

## தென்கிழக்கு பல்கலைக்கழக பதில் துணைவேந்தரின் வீட்டின் மீது துப்பாக்கிச்சூடு

தென்கிழக்கு பல்கலைக்கழகப் பதில் துணைவேந்தர் எம்.நசீரின் வீட்டின் மீது நேற்றுமுன்தினம் அதிகாலை இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

நிந்தவூரில் உள்ள அவரது வீட்டுக்குச் சென்ற இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட இந்தத் துப்பாக்கிச் சூட்டில், அவரது வீட்டின் முன்பக்கம் சேதமடைந்தது.

அத்துடன், துப்பாக்கிதாரிகள் அவரைப் பதவிவிலகவேண்டும் என்று எச்சரிக்கை விடுக்கும் கடிதத்தை வீட்டுக்கு முன்னால் வைத்துவிட்டுச் சென்றுள்ளதாகவும் விசாரணைகளை மேற்கொண்டு வரும் சம்மாந்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

## கொழும்புத் துறைமுகத்தில் வெடிபொருட்கள்

கொழும்புத்துறை முகத்துக்குக் கப்பல்கள் மூலம் கொண்டுவரப்பட்ட இரண்டு கொள்கலன்களில் வெடிமருந்துகள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பசுபிக் குயெஸ்ற் என்ற கப்பல் ஹொங்ஹொங்கிலிருந்து கடந்த மாதம் ஏழாம் திகதி கொழும்புத்துறைமுகத்துக்கு வந்து குறித்த கொள்கலன்களை இறக்கியதாக அகில இலங்கை துறைமுக ஊழியர் சங்கம் தெரிவித்தது.

இந்த கொள்கலன்கள் சோதனைக்காக ஊழியர்களால் திறக்கப்பட்ட வேளை – அதற்குள் வெடிமருந்துகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து ஊழியர்கள் துறைமுக அதிகாரசபையிடம் முறையிட்டுள்ளனர்.

## இராணுவ புலனாய்வாளர்களின் கொலைகள் குறித்தும் ஜனாதிபதி ஆணைக்குழு விசாரிக்க வேண்டுமாம்

### ஆனந்தசங்கரி கோருகிறார்



(கொழும்பு)

கிழக்கில் இடம்பெற்ற விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களின் கொலைச் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட மூவர் கொண்ட விசாரணைக்குழுவுக்கு அதிகாரங்களை வழங்கி – போர் நிறுத்த ஒப்பந்தத்துக்குப் பின்னர் நிகழ்ந்த இராணுவ உளவுப்பிரிவு உறுப்பினர்களின் கொலைச் சம்பவங்களின் பின்னணிகளையும் கண்டறிய வேண்டுமென வீ.ஆனந்தசங்கரி ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிழக்குப் பிராந்தியத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டு. அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் சுட்டுக் கொல்லப்பட்டமை மற்றும் மகளிர் அரசியல் பிரிவுப் பொறுபாளர் குவேனி உட்பட்ட குழுவினர்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டமை தொடர்பாக ஆராய்வதற்கு ஜனாதிபதியால் கடந்த வாரம் ஆணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

போர்நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் இராணுவ உளவுப் பிரிவு உறுப்பினர் போன்று, மாற்றுக் கட்சி உறுப்பினர்கள் பலரும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அவை அனைத்தையும் பற்றிக் கண்டறிவதற்கு ஜனாதிபதியால் ஆணைக்குழு நியமிக்கப்படாமை, மற்றைய கொலைகள் பற்றி ஜனாதிபதியால் மதிப்பிடப்படவில்லை என்பதையே காட்டுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை – ஹெல உறுமய – போர்நிறுத்த காலப்பகுதியில் புலிகள் அமைப் பால் தெற்கின் தலைவர்களும், இராணுவ உளவுப் பிரிவினரும் பெருமளவில் கொல்லப்பட்டுள்ளபோது அதைக் கண்டறிய எந்தவித ஆணைக்குழுவையும் நியமிக்காத ஜனாதிபதி – கிழக்கில் புலிகள் கொல்லப்பட்டதை விசாரிக்க மூவர் கொண்ட ஆணைக்குழுவை நியமித்ததன் மூலம் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பைப் பாதுகாக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளதாக நினைக்கத் தோன்றுவதாக ஜாதிக ஹெல உறுமய குற்றஞ்சாட்டியுள்ளது.

புலிகளுக்கு எதிராகக் கிழக்கில் செயற்படும் ஆயுத குழு மற்றும் புலிகளுக்கு எதிரான ஏனைய குழுக்களின் செயற்பாடுகளைக் கண்டறிய ஆணைக் குழுவை நியமித்ததன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நாட்டைக் காட்டிக் கொடுத்துவிட்டது.

இந்த ஆணைக்குழுவை நியமித்ததன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துச் செயற்பாடுகளையும் அரசு ஏற்றுக்கொண்டுள்ளது என்பது தெரிகிறது எனவும் ஜாதிக ஹெல உறுமய குற்றஞ்சாட்டியுள்ளது. (தே)

## தொண்டமானின் ஏழு கோரிக்கைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஏழு கோரிக்கைகளுக்கு தற்பொழுது அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதாகத் தொழிலாளர் காங்கிரஸின் பிரசாரப்பேச்சாளர் யோகராஜன் தெரிவித்தார்.


அதன்படி புதிய ஆசிரிய நியமனங்கள், எழுதுவினைஞர் நியமனங்கள், ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரிக்கு அதிக மாணவர்களை உள்வாங்குதல், தொழில்நுட்பக் கல்லூரிகளை நிறுவுதல், மேல் கொத்மலை மின் சக்தித் திட்டத்துக்கு ஒரு நீர்வீழ்ச்சியை மட்டும் ஈடுபடுத்தி ஆரம்பிப்பது போன்றவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

இதன்படி அடுத்த சில மாதங்களுக்குள் இந்தக் கோரிக்கைகளை நிவர்த்தி செய்வதற்கு அரசு நடவடிக்கைகளை எடுக்குமென இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகாவிடம் முன்வைக்கப்பட்ட 14 நிபந்தனைகளுள் வடக்கு – கிழக்கில் இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்துவது என்பதும் உட்படுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (தே)

## புலிகளை தேசிய அரசியலில் இணைக்க சர்வதேசம் ஆதரவளிக்க வேண்டும்

### ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்க



(கொழும்பு)

விடுதலைப்புலிகளை தேசிய அரசியலில் இணைத்துக்கொள்வதற்கு அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளுக்கு சர்வதேச சமூகம் ஆதரவளிக்க வேண்டும் எனக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஆயுதப் போராட்ட அமைப்பான விடுதலைப் புலிகளை முற்று முழுதான அரசியல் கட்சியாக மாற்றுவதற்கான முயற்சிகளுக்கு ஆதரவளிக்குமாறு ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க சர்வதேச சமூகத்திடம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

தாங்களும் ஆரம்பகாலத்தில் ஆயுதப் போராட்ட அமைப்பாகச் செயற்பட்டதாகவும், பின் தேசிய அரசியலில் இணைந்து கொண்டுள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ள சோமவன்ச அமரசிங்க அதுபோல் விடுதலைப்புலிகளும் தேசிய அரசியலில் இணைந்துகொள்ளவேண்டும் எனக் கோரியுள்ளார். (01)

## சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டால் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவளிக்கும்!

### திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாட்டின் அடிப்படையில் அரசாங்கம் சமாதான முயற்சிகளை ஆரம்பிக்குமானால், அரசுக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவளிக்கும் என அறிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர் சந்திப்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் துணைப் பொதுச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க இந்த அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

அரசாங்கம் – சமாதான முயற்சிகளைத் தொடரமுடியாத நிலையில் உள்ளது. அரசில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி – சமாதான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுவதை அனுமதிக்காது.

ஜே.வி.பியின் எதிர்ப்பையும் தாண்டி, அரசாங்கம் சமாதான முயற்சிகளை உரியமுறையில் முன்னெடுக்குமானால், அதற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவளிக்கும் என அவர் மேலும் கூறியுள்ளார்.

## ஆணைக்குழு நியமிக்க கோரிக்கை

இலங்கையில் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயல்பாடுகளைக் கண்காணிப்பதற்கு ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும் என ஜே.வி.பி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பான திட்டம் ஒன்றை சபாநாயகரிடம் கையளிப்பதற்கு ஜே.வி.பியினர் தீர்மானித்துள்ளனர்.

இலங்கையின் தேசிய ஒருமைப்பாடு பாதுகாப்பு உள்ளிட்ட நான்கு முக்கிய அம்சங்கள் இந்தத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக ஜே.வி.பி அறிவித்துள்ளது. (01)

## இலங்கைக் கடற்படைக்கு அமெரிக்க அரசு நிதியுதவி

(கொழும்பு)

இலங்கையின் பாதுகாப்பு நடவடிக்கைகளின் அபிவிருத்திக்கு அமெரிக்கா கூடுதல் நிதி உதவியளிக்க முன்வந்துள்ளது.

சர்வதேச விவகாரங்களுக்கான அமெரிக்க இராஜாங்க சபையில் இந்த அறிவித்தலை அமெரிக்காவின் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான உதவி இராஜாங்கச் செயலர் டொனால்ட் காம்ப் வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் கடற்படையைப் பலப்படுத்துவதன் மூலம், உள்நாட்டில் கடற்படையினர் எதிர்நோக்கும் சவால்களைப் போக்கமுடியும் என்றும் அதற்காகவே அமெரிக்கா இந்த கூடுதல் நிதி உதவியை அளிக்கவுள்ளதாகவும் அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

சர்வதேச நாடுகளின் இராணுவ நலன்களுக்கான அமெரிக்க நிதி உதவியின் ஒரு பகுதியாகவே இலங்கைக்கான இந்த நிதி உதவி வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (01)

## இந்தமாத இறுதிக்குள் அமைச்சரவை மாற்றம்?

இந்தமாத இறுதிக்குள் அமைச்சரவையில் சில மாற்றங்கள் ஏற்படுத்தப்படலாம் என அரசாங்கத்தரப்பு தகவல்களை மேற்கோள்காட்டி கொழும்புப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

ஜாதிக ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர் உடுவே தம்மாலோகதேரருக்கு புத்தசாசன அமைச்சும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமானுக்கு உள்நாட்டு விமானப் போக்குவரத்து அமைச்சும் வழங்கப்படலாம் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை – சபாநாயகர் ஜே.எம்.லொக்குபண்டாரவுக்கு எதிராக நம்பிக்கையில்லப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவருவதற்கு அரசாங்கம் திட்டமிட்டு வருவதாகவும் தெரியவருகிறது.

நாடாளுமன்ற சபாநாயகராக கீதாஞ்சன குணவர்த்தனவை நியமனம் செய்யும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டுவருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (01)

## நிவாரண பொருட்களுக்கு சுங்கத் தீர்வை நீக்கம்

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்கு என, உலகின் பல நாடுகளிலிருந்து அனுப்பிவைக்கப்பட்ட நிவாரணப் பொருட்கள் அனைத்துக்குமான சுங்கத் தீர்வையை நீக்கியுள்ளதாக அறிவித்துள்ளது.

நிவாரணப் பொருட்களுக்கான சுங்கத் தீர்வையை அரசாங்கம் விதித்ததையடுத்து, நிவாரணப் பொருட்களைப் பொறுப்பேற்க சம்பந்தப்பட்டவர்கள் தயக்கம் காட்டி வந்தமையே இந்தத் தடை நீக்கத்துக்கான காரணமாகக் கருதப்படுகிறது.

அரசாங்கத்தின் சுங்கத் தீர்வை அறிவித்தலையடுத்து, பெருமளவான நிவாரணப் பொருட்கள் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் தேங்கியிருந்ததாகவும் அதனை உடனடியாக அகற்றுவதற்காகவே இந்தப் பொருட்களுக்கான சுங்கத் தீர்வையை அரசாங்கம் நீக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நிவாரணப் பொருட்களுக்கான சுங்கத் தீர்வை நீக்கமானது – எதிர்வரும் ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதிவரை மட்டுமே அமுல்படுத்தப்படும் என்றும், அதைத் தொடர்ந்து சுங்கத் தீர்வை அறவிடப்படும் என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

## ஐ.நா. சபையின் செயலாளர் பதவிக்கு ஜயந்த தனபால போட்டியிடவுள்ளார்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பதவிக்கான வேட்பாளராக அரசின் சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபாலவை நிறுத்துவதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பை அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

இதற்கான பிரசாரத்தை மேற்கொள்ளுமாறு – இலங்கை வெளியுறவு அமைச்சு, சர்வதேச ரீதியாகவுள்ள தனது தூதரகங்களுக்குப் பணித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் தற்போதைய செயலாளர் கொபி.அனானின் பதவிக்காலம் அடுத்த ஆண்டு முடிவடைவதையடுத்தே, இந்தச் சந்தர்ப்பம் ஆசிய நாட்டுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே இலங்கையின் சார்பில் அரசின் சமாதான செயலகப் பணிப்பாளர் – ஜயந்த தனபால, ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளராகப் போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (01)

## புளொட் உறுப்பினர் மீது துப்பாக்கிச்சூடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் புளொட் உறுப்பினரொருவர், இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் காயங்களுடன் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கோவிந்தன் வீதியிலுள்ள மக்கள் வங்கிச் சந்தியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு நகரிலிருந்து சைக்கிளில் தனது அலுவலகத்துக்குச் சென்றுகொண்டிருந்த சமயம் – மோட்டார் சைக்கிளில் வந்த நபரொருவர் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த கணேஸ் எனப்படும் சந்திவெளியைச் சேர்ந்த கந்தையா கணேசராசா என்ற இந்த நபர்– மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# 5ஆவது ஒருநாள் போட்டியிலும் அவுஸ்ரேலிய அணியே வெற்றி!



நியூஸிலாந்து அணிக்கு எதிரான ஐந்தாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டியிலும் அவுஸ்ரேலிய அணி - 122 ஓட்டங்களால் அபார வெற்றியைப் பெற்றது.

நேற்று நடைபெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூஸிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் இறங்கியது.

இதனால் அவுஸ்ரேலிய அணி துடுப்பெடுத்தாடத் தொடங்கியது. அவுஸ்ரேலிய வீரர்கள் கில்கிறிஸ்ட், சைமன்ஸ், பொண்டிங், கிளார்க் ஆகியோர் அதிரடி ஆட்டம் ஆடியதால் ரசிகர்கள் பெரும் ஆரவாரமடைந்தனர்.

அணியின் ஸ்கோர் 37ஆக இருந்தபோது - முதல் விக்கெட்டாக 5 ஓட்டங்களுடன் கடிச் பவிலியன் திரும்ப - அதிரடி ஆட்டம் ஆடிக் கொண்டிருந்த கில்கிறிஸ்ட்டுடன் பொண்டிங் ஜோடி சேர்ந்தார்.

ஆனாலும் பொண்டிங் ஒருமுனையில் அமைதியாக ஆட, கில்கிறிஸ்ட் அதிரடியாக ஓட்டங்களைக் குவித்து - ஸ்கோர் 129ஆக இருந்தபோது - ஆட்டமிழந்தார். இதில் 61 பந்துகளில் 9 பவுண்டரிகள், 4 சிக்சர்களுடன் 91 ஓட்டங்களை கில்கிறிஸ்ட் பெற்றார்.

இவர் ஆட்டமிழந்ததையடுத்து - மார்ட்டினுடன் ஜோடி சேர்ந்த பொண்டிங் தனது பங்கிற்கு விளாசத் தொடங்கினார். பவுண்டரிகள், சிக்ஸர்களாக பந்து பறக்க, ஸ்கோர் 204ஆக இருந்தபோது மார்ட்டின் வீழ்த்தப்பட்டார். அவர் 46 பந்துகளில் 3 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 40 ஓட்டங்களை எடுத்தார்.


இதையடுத்து சைமன்ஸ் களமிறங்கி 16 பந்துகளில் 17 ஓட்டங்களை எடுத்த நிலையில் ரன் அவுட்டானார்.

இதையடுத்து பொண்டிங்குடன் இணைந்துகொண்ட கிளார்க் 36 பந்துகளில் 5 பவுண்டரிகளுடன், 43 ஓட்



டங்களை எடுத்தநிலையில், தனது விக்கெட்டைப் பறிகொடுக்க நேர்ந்தது.

ஆட்டநேரமுடிவில் 5 விக்கெட் இழப்புக்கு அவுஸ்ரேலிய அணி 347 ஓட்டங்களைக் குவித்தது. பொண்டிங் 127 பந்துகளில் 10 பவுண்டரிகள், 5



சிக்சர்களுடன் 141 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இதையடுத்து கடினமான இலக்குடன் களமிறங்கிய நியூஸிலாந்து அணி - பெரிதும் போராடாமலேயே 122 ஓட்டங்களால் தோல்வி கண்டது.

கம்மிங் -13, பிளெமிங் -35, எச்.மார்ஷல் -28, ஜே.மார்ஷல் -0, மக்மிலன் -63, மக்கலம் -36, கன்னிங்-16, மில்ஸ்-10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

விற்றோரி 16 ஓட்டங்களுடனும், ஹமில்டன் 1 ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

50 ஓவர்கள் முடிவில் நியூஸிலாந்து அணியால் 8 விக்கெட் இழப்புக்கு 225 ஓட்டங்களை மட்டுமே பெறமுடிந்ததால் - 122 ஓட்டங்களால் தோல்விகண்டது.

பந்துவீச்சில் கஸ்பரோவிச் -3, சைமன்ஸ் -2, லீ, மக்ரா தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

5 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரை அவுஸ்ரேலியா ஒட்டுமொத்தமாகக் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.

# பயிற்சி விதிமுறைகளை மீறிய நரேனுக்கு அபராதம் விதிப்பு!



'போர்முலா 1' கார்ப்பந்தயப் பயிற்சியின்போது நிர்ணயிக்கப்பட்டதைவிட அதிக வேகத்தில் கார் ஓட்டியதற்காக - தமிழக வீரர் நரேன் கார்த்திகேயனுக்கு 8லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

'போர்முலா 1' கார்ப் பந்தயத்தில் கோவையைச் சேர்ந்த நரேன் கார்த்திகேயன் பங்கேற்கிறார். அவர் ஜோர்தான் அணியில் இடம்பெற்றுள்ளார்.

19 சுற்றுக்களைக் கொண்ட 'போர்முலா 1' கார்ப் பந்தயத்தின் முதற்சுற்று மெல்போர்ன் நகரில் இன்று நடைபெறுகிறது. இந்தப்போட்டியில் பங்கேற்கும் வீரர்களுக்கான பயிற்சி நேற்று முன்தினம் தொடங்கியது.

பயிற்சியின்போது, 80 கிலோ மீற்றர் வேகத்துக்கு மேல் ஓட்டக்கூடாது. ஆனால், நரேன் கார்த்திகேயன் 86.2 கிலோ மீற்றர் வேகத்தில் ஓட்டினார். போட்டி விதிமுறையை மீறிய நரேனுக்கு நடுவர்கள் 8 லட்சம் ரூபா அபராதம் விதித்தனர்.

# தர்மசாலா பயிற்சி ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவு



இந்திய போர்ட் லெவன் அணிக்கு எதிராக பாகிஸ்தான் அணி மோதிய மூன்றுநாள் பயிற்சி ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 273 ஓட்டங்களைப் பெற்றநிலையில், நேற்றுமுன்தினம் இந்திய போர்ட் லெவன் அணி துடுப்பெடுத்தாடியிருந்தது.

இரண்டாம்நாள் ஆட்டநேரமுடிவில் ஒரு விக்கெட் இழப்புக்கு 91 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. மூன்றாவது நாளான நேற்று தர்மசாலாவில் மழை பெய்ததால், ஆட்டம் தாமதமாகவே தொடங்கியது.

தாமதமாகத் தொடங்கிய போட்டி பின்னர், போதிய வெளிச்சமின்மையால் சமனிலையில் முடிவுற்றது.

நேற்று 11.4 ஓவர்கள் மட்டுமே நடைபெற்ற இந்தப் போட்டியில் இந்திய போர்ட் லெவன் அணி ஒரு விக்கெட் இழப்புக்கு 120 ஓட்டங்கள் எடுத்திருந்தது. யாதவ் 49 ஓட்டங்களுடனும், கைவ் 49 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

## குறைந்த பந்துகளில் அரைச்சதம் அடித்து கலிஸ் புதிய சாதனை

(கேப்ரவுண்)




தென்னாபிரிக்க வீரர் கலிஸ் நேற்று புதிய சாதனை படைத்தார். குறைந்த பந்தில் அரைச்சதம் அடித்தே அவர் உலக சாதனை புரிந்தார். சிம்பாப்வேயுடனான முதல் டெஸ்டிலேயே கலிஸ் 24 பந்துகளில் 50 ஓட்டங்களை எடுத்தார்.

இதற்கு முன்பு இங்கிலாந்து வீரர் பொத்தம் 1981ஆம் ஆண்டு 26 பந்துகளில் அரைச்சதம் அடித்ததே சாத னையாக இருந்தது.

டெஸ்ட் போட்டியில் குறைந்த பந்தில் அரைச்சதமடித்த முதல் 5 வீரர்கள் வருமாறு - 1. கலிஸ் (தென்னாபிரிக்கா) 24 பந்துகள், 2. பொத்தம் (இங்கிலாந்து) 26 பந்துகள், 3. யுகானா (பாகிஸ்தான்) 27 பந்துகள், 4. கபில்தேவ் (இந்தியா) 30 பந்துகள், 5. குரோன்ஞே (தென்னாபிரிக்கா) 31 பந்துகள்.

# சதுரங்கப் புதிர்



**இன்றைய கேள்வி:**

கறுப்பு முதலாவதாக நகர்த்தி காயொன்றினை வெல்லவேண்டும்.

*(விடை நாளை.....)*

**நேற்றைய கேள்விக்கான விடை:**

1... $Qxe_3$ 2.. $Rxe_3Bh_6$ இந்த நகர்த்தலுடன் கறுப்பானது வெள்ளையினது ஒரு காயினை மேலதிகமாக எடுப்பதன் மூலம் வெல்கின்றது.

**தொகுப்பு - சி. வித்தியாதரன்.**

# பாகிஸ்தானை எதிர்கொள்வதில் கூடுதல் நிர்ப்பந்தம் ஏதுமில்லை!



(கொல்கத்தா)

பாகிஸ்தான் அணியை இந்தியாவில் எதிர்கொள்வதால், கூடுதல் நிர்ப்பந்தம் ஏதும் அணிக்குக் கிடையாது என இந்திய அணியின் கப்டன் சௌரவ் கங்கூலி தெரிவித்தார்.

ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் அம்சம் கொண்டது இந்தத் தொடர். அத்துடன் வீரர்களும் திறமையைப் பரிசோதித்துக் கொள்ளும் விதமானது இந்தத் தொடர். இதில் முக்கியமானது உணர்ச்சிவசப்படாமல் நிதான மாக ஆடவேண்டியது.

பாகிஸ்தான் மாதிரியான நாடுகளுடன் விளையாடுவதற்கு அனுபவம் அவசியமானது என்பது உண்மை. ஆனால் அதற்கேற்ற அம்சங்களை இந்திய வீரர்கள் கொண்டுள்ளனர்.


இந்தத் தொடரில் கூடுதலாக ஒரு மிதவேகப்பந்து வீச்சாளரை களமிறக்கவும் திட்டமிட்டுள்ளோம். அந்தப் பணியை நானே மேற்கொள்ளலாமென நினைக்கிறேன்.

கடந்த ஆண்டு தென்னாபிரிக்காவுக்கு எதிரான போட்டிகளில் பந்து வீசினேன். அது மாதிரி இந்தத் தொடரிலும் பந்துவீசக் கூடாது என்பதற்குக் காரணமேதும் இல்லை. அதற்காக தொடர்ந்து பந்துவீச்சுப் பயிற்சியும் மேற்கொண்டுதான் வருகிறேன் என்றார் கங்கூலி.

# விளையாட்டு

## தென்னாபிரிக்காவுடனான டெஸ்ட்

# 54 ஓட்டங்களுக்குள் சிம்பாப்வே சுருண்டது!



(கேப்டவுண்)

முதல் டெஸ்ட் போட்டியில் 54 ஓட்டங்களுக்குள் சிம்பாப்வே அணியைச் சுருட்டிய தென்னாபிரிக்க அணி, முதல் இனிங்ஸில் 340 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

நேற்றுமுன்தினம் கேப்டவுணில் ஆரம்பமான இந்த டெஸ்ட் போட்டியில் - நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சிம்பாப்வே அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இந்த அணியில் மற்சிகென்யேரி மட்டுமே அதிகபட்சமாக 12 ஓட்டங்களை எடுத்தார். ஏனைய வீரர்கள் அனைவருமே ஒற்றை ஓட்டங்களையே எடுத்தனர்.

31.2 ஓவர்களிலேயே சிம்பாப்வே அணி 54 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

கலிஸ் 13 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், பொலக் 9 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், என்ரினி 23 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இதையடுத்து துடுப்பெடுத்தாட ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி முதல் நாளிலேயே 50 ஓவர்களில், 3 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 340 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை டிக்ளேர் செய்தது.

தொடக்க வீரர்களான சிமித்தும் டிவில்லியர்ஸும் இணைந்து அபாரமாக ஆடி - 217 ஓட்டங்களை இணைப்போட்டமாகப் பெற்றனர்.

சிமித் 107 பந்துகளில் 17 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களுடன் 121 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்ததையடுத்து, ரூடொல்ப் களமிறங்கினார்.


ஸ்கோர் 234ஆக இருந்தபோது - டிவில்லியர்ஸ் 118 பந்துகளில் 20 பவுண்டரிகளுடன் 90 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்ததையடுத்து கலிஸ் களமிறங்கினார்.

கலிஸின் அதிரடியால் புதிய சாதனை ஒன்று படைக்கப்பட்டது. அவர் 25 பந்துகளில் 3 பவுண்டரிகள், 5 சிக்ஸர்களுடன் 54 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்க, கிப்ஸ் களமிறங்கினார்.

50 ஓவர்கள் முடிவில் தென்னாபிரிக்க அணி 340 ஓட்டங்களைப் பெற்றநிலையில், ஆட்டத்தை முடித்துக்கொண்டது. ரூடொல்ப் ஆட்டமிழக்காமல் 50 பந்துகளில் 7 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 49 ஓட்டங்களையும், கிப்ஸ் 8 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சிம்பாப்வே அணி வீரர் கிரீமரே 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார்.

இதையடுத்து இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி ஒரு விக்கெட்டை இழந்து 52 ஓட்டங்களைப் பெற்றநிலையில் முதல்நாள் ஆட்டம் முடிவுக்கு வந்திருந்தது.



மற்சிகென்யேரி 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தபின்னர் - ரோஜர் 24 ஓட்டங்களுடனும், ஏபிரஹாம் 8 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

# பாகிஸ்தான் வீரர்கள் பதிலடி கொடுப்பார்கள்

## வசீம் அக்ரம் நம்பிக்கை



கடந்த ஆண்டு, சொந்த மண்ணில் பாகிஸ்தான் வீரர்கள், இந்திய அணிக்கு நெருக்கடி அளிக்கத் தவறிவிட்டனர். இதற்கு இந்தமுறை பதிலடி தருவார்களென எதிர்பார்ப்பதாக பாகிஸ்தான் அணியின் முன்னாள் கப்டன் வசீம் அக்ரம் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் கருத்து வெளியிடுகையில் -

பாகிஸ்தானில் இளம் வீரர்கள் நல்ல நிலையில் உள்ளனர். அவுஸ்ரேலியாவுக்கு எதிரான தொடரில் விளையாடியதன் மூலம் அனைவரும் முழு பலத்துடன் காணப்படுகின்றனர்.

குறிப்பாக இன்சமாம், யுகானா இந்தமுறை அதிக ஓட்டங்கள் குவிப்பார்களென எதிர்பார்க்கப்படுகிறது. இந்திய அணியைப் பொறுத்தவரையில் உள்ளூர் போட்டியில் மட்டுமே விளையாடியுள்ளது.

தவிர, குட்டி அணியான பங்களாதேஷுக்கு எதிராக வெற்றி பெற்றுள்ளது. சமீபத்தில், எந்த மிகப்பெரிய அணிக்கெதிராகவும் இவர்கள் விளையாடவில்லை. இதனால் வீரர்கள் எப்படி ஆடுவார்கள் என்பது கேள்விக்குறிதான். இது பாகிஸ்தானுக்குச் சாதகமானது.

அத்தோடு சொந்த மண்ணில் போட்டி நடப்பது இந்திய அணிக்கு அதிக நெருக்கடி அளிக்கும். ஆனாலும் சச்சின், ராவிட், கங்கூலி, ஷேவாக் ஆகியோர் எந்த நிலையிலும் ஆட்டத்தின் போக்கை மாற்றக்கூடியவர்கள். இதனால் பயிற்சி இல்லையென்றாலும் இவர்களைச் சமாளிப்பது கடினம்தான் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மக்களின் பங்களிப்பால் தான் எமது போராட்டம் வலுப்பெற்றது

## வலி. மேற்கு அரசியற்துறை பொறுப்பாளர் அன்பு

மக்கள் தான் இயக்கம். இயக்கம் தான் மக்கள் என நாம் இன்று வளர்ந்துள்ளோம். மக்களின் பங்களிப்பு இல்லையென்றால், எமது இயக்கம் இந்த வளர்ச்சியைக் கண்டிராது.

மக்களின் நிதியிலிருந்தே நாம் ஆயுதபலம் முதல் அனைத்துப் பலத்தையும் பெற்றுள்ளோம் என, தமிழீழ விடுதலைப் புலிகளின் வலிமேற்கு அரசியற்துறைப் பொறுப்பாளர் அன்பு தெரிவித்தார்.

வட்டு இந்து வாலிபர் சங்கத்தால் சுனாமியால் பாதிக்கப்பட்டு கல்விஉபகரணங்களையும், ஏனைய வசதிகளையும் இழந்த வடமராட்சி, முல்லைத்தீவு மாணவர்களுக்கு சைக்கிள் மற்றும் விளையாட்டு உபகரணங்களை வழங்கும் நிகழ்வு சங்க மண்டபத்தில் கடந்த 26 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் உரையாற்றுகையில் –

சர்வதேச மட்டத்தில் எமது இயக்கத்தின் செயற்பாடுகளுக்கு மறைமுகமான ஆதரவும், நேரடி ஆதரவும் பெருகிக்கொண்டே வருகிறது.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த ஐ.நா.பொதுச் செயலாளர் கொபி அனானை –விடுதலைப் புலிகளின் பிரதேசத்துக்கு வராமல் தடுத்தது பேரினவாத அரசாங்கம்.

ஆனால், இன்று எமது இயக்க உறுப்பினர் மட்டு – அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் படுகொலையை, அதே கொபி அனான் வன்மையாகக் கண்டித்து, ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இது நமது இயக்கத்துக்குச் சர்வதேச அங்கீகாரம் கிடைத்ததாகவே நாம் எண்ணுகின்றோம். இதனைக்கூட பேரினவாத அரசால் ஜீரணிக்க முடியவில்லை. அனானுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களும், ஊர்வலங்களும் நடந்தேறியுள்ளன.

வட்டு. இந்து வாலிபர் சங்கத்தைப் பொறுத்தமட்டில் –வலிமேற்கில் உள்ள ஏனைய சங்கங்களை விட, ஓர் முன்மாதிரியான சங்கமாக இது தனது நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்கிறது.

கிழக்கு மாகாண மக்கள் கடும் வெள்ளப்பெருக்கால் அவஸ்தைப் பட்டு பாதிக்கப்பட்டிருந்தவேளை, யாழ். குடாநாட்டிலேயிருந்து அவர்களுக்கான உதவிப் பொருட்களை வழங்கியவர்கள் இந்தச் சங்கத்தினர்.

மீண்டும் அண்மையில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின்போதும் முல்லைத்தீவு, வடமராட்சி மக்களுக்கு உலர் உணவு வகைகளையும், மருந்துப் பொருட்களையும் இவர்கள் வழங்கினர்.

இன்று சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கல்வி பயிலும் மாணவர்களுக்காக 30 சைக்கிள்களையும், 45 ஆயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களையும் வழங்கியுள்ளனர்.

இன்றைய இளைஞர் சமுதாயத்தில் இவர்களின் முன்மாதிரியைப் பின்பற்றி, மற்றைய இளம் சந்ததியினரும் மாறவேண்டும். கலாசார சீரழிவில் வேண்டத்தகாத செயற்பாடுகளில் தமது இளம் பருவத்தை வீணடிக்கும் இளைஞர்கள் மத்தியில், இவர்களின் இவ்வாறான உதவிகளை நாம் பாராட்டுகிறோம்.

புலம்பெயர்ந்து வாழும் எம் மக்கள் –இன்றல்ல, நேற்றல்ல என்றுமே தமது தாயக மக்களுக்காகத் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்துகொண்டிருக்கின்றார்கள்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கு அவர்கள் வழங்கிய நிதியால், சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் பெரிதும் பயனடைந்துள்ளனர். அரசாங்கம் சர்வதேச உதவிகளைப் பெற்று வருகின்றது.

ஆனால், வடக்கு – கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்த உதவிகள் கிடைப்பதற்கான எந்தவித முயற்சியையும் மேற்கொள்ளவில்லை.

தமிழ் மக்களை அரசு புறக்கணித்து வருகிறது. இந்த நிலை மாறவேண்டும். நமக்கென்று ஓர் தன்னாட்சி அதிகாரமுள்ள இடைக்கால நிர்வாக சபை உருவாக வேண்டும். அன்றுதான் எமது பிரச்சினைகளுக்கும் இறுதியான ஓர் தீர்வு கிடைக்கும் எனவும் தெரிவித்தார்.

சங்கத்தின் தலைவர் சி.சிவதரன் தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் – யாழ். மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் கண்ணன், யாழ். மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் கிருஷ்ணா, ஆறு திருமுருகன், தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன், ஐ.நா.சபையின் உணவு விவசாயத் திட்ட ஆலோசகர் சு.திருஞானசம்பந்தர், மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட வதிவிடப் பிரதிநிதி மோகன் உட்பட அமெரிக்க பேராசிரியர் பேனாட் பற்றிக் ஆகியோரும் கலந்துகொண்டனர். (48)

## சின்னஞ்சிறு செய்திகள்

### விளையாட்டுப் போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் கோரல்

கொக்குவில் காமாட்சி சனசமூக நிலையத்தால் நடத்தப்படவுள்ள வருடாந்த உள்ளக விளையாட்டுப் போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கரம் (ஒற்றையர்), பூப்பந்தாட்டம் (இரட்டையர்), டாம், சதுரங்கம் ஆகிய போட்டிகள் எதிர்வரும் 8 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை நிலைய வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தப் போட்டிகளில் இருபாலாரும் பங்குகொள்ள முடியுமெனவும், விண்ணப்பங்கள் யாவும் 7 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும், காமாட்சி சனசமூக நிலையத்தினர் கேட்டுள்ளனர். (91)

### சிவராத்திரி பூசை

யாழ்ப்பாணம் சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் – எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சிவராத்திரி பூசை வெகு சிறப்பாக நடை பெறவுள்ளது.

நான்கு சாமப் பூசைகள் நடைபெறுவதுடன், அன்று மாலை 4 மணிக்கு தலைவர் இ.விஜயரத்தினம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுகளுக்கு, சைவப் புலவர் வ.கந்தசாமி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

திருமுறை ஓதுதல், ஆசியுரை என்பன இடம்பெற்று –சைவசமய அறிவுப்போட்டிகளிலும், தொண்டுபடும் செயன்முறைப் போட்டிகளிலும் பரிசுபெற்றவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (101)

### யாழ். பல்கலைக்கழகத்தில் 'காதல்' திரைப்படம்

யாழ்.பல்கலை திரைப்பட வட்டத்தின் ஏற்பாட்டில் புகழ்பெற்ற இயக்குநர் 'பாலாஜி' உருவாக்கிய 'காதல்' எனும் தமிழ்த் திரைப்படம் இன்று முற்பகல் 10 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் காண்பிக்கப்படும்.

படக்காட்சியின் இறுதியில் வழமைபோல் படம் பற்றிய கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறும். ஆர்வலர்கள் எவரும் வருகை தந்து பயன்பெறமுடியுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## மோட்டார் சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் படுகாயம்

மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த ஒருவர் – யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் இணுவில் லட்சுமி திரையரங்குக்குச் சமீபமாக இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், மல்லாகம் மத்தியைச் சேர்ந்த கந்தசாமி ஞானசீலன் (வயது 41) என்பவரே படுகாயமடைந்தநிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது –

மல்லாகத்திலுள்ள் தனது வீட்டிலிருந்து மோட்டார் சைக்கிளில் – யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றுகொண்டிருந்தவேளை, எதிரே வந்துகொண்டிருந்த லான்ட்மாஸ்ரருடன் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றது.

## கோஷ்டி மோதலில் சிக்கி குடும்பஸ்தர் படுகாயம்


இரு குழுக்களிடையே ஏற்பட்ட மோதலின்போது, வீதியால் சென்றுகொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் காக்கைதீவு – கல்லுண்டாய் வெளியில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் சுன்னாகம் சபாபதி வீதியைச் சேர்ந்த தோமஸ் அருள்நாதன் (வயது 35) என்பவரே படுகாயமடைந்த் நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தச் சம்பவம்பற்றி மேலும் தெரியவருவதாவது –

இரு குழுக்களிடையே பல நாட்களாக மோதல் இடம்பெற்றது. சம்பவதினம் பிரஸ்தாப நபர் காலையில் வேலைக்குச் சென்றுகொண்டிருந்த சமயம் – வீதியில் கூடி நின்ற குழுவினரால் பொல்லுகள், தடிகளால் தாக்கப்பட்டு காயமடைந்துள்ளதாகத் தெரியவருகிறது.





யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெற்ற மேற்பிரிவின் இல்ல மெய்வன்மைப் போட்டியை கல்லூரியின் பழைய மாணவரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச்சேவைப் பணிப்பாளருமான ரீ.உருத்திராபதி போட்டியை ஆரம்பித்து வைப்பதையும் – பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் வண.பிதா ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் உரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம்.

## மீன்பிடி டிப்ளோமாதாரிகள் மகஜர் கையளிப்பு

மீன்பிடி டிப்ளோமா மாணவர்கள் – தமக்கு நியமனம் வழங்காமையை ஆட்சேபித்து, நேற்று முன்தினம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

இவர்கள் தமது மகஜரில் – 2003 ஆம் ஆண்டு 1 ஆம் மாதத்துக்குள் தமது கற்கைநெறி முடிவடையவில்லை என்பதால், இந்த நியமனம் வழங்கப்படவில்லை எனவும், ஆனால் வர்த்தமானி அறிவித்தலில் இவ்வாறான அறிவுறுத்தல் எவையும் விடுக்கப்படவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

## ரயில்வே திணைக்களத்தால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

இலங்கை ரயில்வே திணைக்களத்தின் ரயில்வே மேற்பார்வை முகாமைத்துவ சேவை வகுப்பு II 'ஆ' தரத்துக்கு நிரந்தர பாதைபரிசோதகர், கட்டடப் பரிசோதகர், பாலப் பரிசோதகர், சமிக்ஞை, தொலைத்தொடர்பு பரிசோதகர், இயக்கக்தள முகாரி, இயந்திர முகாரி போன்ற பதவிகளுக்கு வெளி விண்ணப்பதாரிகளைச் சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை – எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னதாக ரயில்வே பொது முகாமையாளர் காரியாலயம், கொழும்பு 10 எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களையும், அறிவுறுத்தல்களையும் 25–02–2005 வெளியான அரச வர்த்தமானியில் பார்வையிடலாம். (44)

## வலிகாமம் தெற்கு பிரதேச சபையால் 4 மயானங்கள் புனரமைக்கப்படவுள்ளன

(சுன்னாகம்)

வலி. தெற்குப் பிரதேச சபையின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ், பிரதேச சபைக்குட்பட்ட நான்கு இந்து மயானங்கள் புனரமைக்கப்படவுள்ளதாக, பிரதேச சபை செயலாளர் சரஸ்வதி சொக்கலிங்கம் தெரிவித்தார்.

ஏழாலை– உசத்தியோடை இந்து மயானம், ஈவினை – இந்து மயானம், கந்தரோடை – சங்கம்புலவு இந்து மயானம், புன்னாலைக்கட்டுவன் – மத்தாளோடை இந்து மயானம் ஆகிய மயானங்களே புனரமைப்புக்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, எட்டு லட்சம் ரூபா செலவில் இந்த நான்கு மயானங்களுக்கும் எரி கொட்டகைகளும் அமைக்கப்பட்டுள்ளதாகவும், மேலதிக புரனமைப்புப் பணிகளுக்கு பொது அமைப்புக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டு மெனவும் பிரதேச செயலாளர் கேட்டுள்ளார். (91)

## வருடாந்த மஹோற்சவம்

வல்வெட்டித்துறை வைத்தியேசுவரர் கோயில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 10ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 24ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (14)

## உரும்பிராய் இந்துக் கல்லூரியில் கணினி டிப்ளோமா கற்கை நெறி!

(உரும்பிராய்)

உரும்பிராய் இந்துக் கல்லூரியின் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான கணினி டிப்ளோமா கற்கை நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தக் கற்கைநெறி – பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன், யாழ்.வலயத்தின் மேற்பார்வையின் கீழ் இடம்பெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சை மூலமாகத் தெரிவுசெய்யப்பட்ட 65 மாணவர்கள் இந்தக் கற்கைநெறியில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களிலேயே கணினி டிப்ளோமா கற்கை வகுப்புகள் நடைபெறுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (91)

# நெருப்பைக் கடக்கும் புயல்



கவாஸ்கர் - சச்சின்
காவியமும் நாயகனும்

திட்டமிட்டபடி பாகிஸ்தான் அணி இந்தியா வந்து சேர்ந்துவிட்டது. இந்தத் தொடரை யார் கைப்பற்றுவார்கள் என்ற எதிர்பார்ப்பு ஒருபுறம் இருந்தாலும், ஒட்டுமொத்த கிரிக்கெட் ரசிகர்களது எதிர்பார்ப்பும் சச்சின் டெண்டுல்கர் மீதே திரும்பியுள்ளது. டெஸ்ட் போட்டிகளில் 10 ஆயிரம் ஓட்டங்களைப் பெறுவதற்கு இன்னமும் அவருக்கு 121 ஓட்டங்கள் மட்டுமே தேவைப்படுகிறது.

மூன்று டெஸ்ட் போட்டிகள் கொண்ட இந்தத் தொடரில் 121 ஓட்டங்களைப் பெறுவதென்பது அவருக்கு இயலாத காரியமல்ல. இதன் மூலம் டெஸ்ட் போட்டிகளிலும், ஒருநாள் போட்டிகளிலும் 10 ஆயிரம் ஓட்டங்களைக் குவித்த ஒரேயொரு வீரரென்ற பெருமையை அவர் பெற்றுக்கொள்வார். அத்தோடு டெஸ்ட் போட்டிகளில் 10 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த வீரர்களின் பட்டியலில் 5 ஆவது வீரராகவும் இணைந்துகொள்வார் டெண்டுல்கர். இதற்கு முன்னர் சுனில் கவாஸ்கர், அலன் போடர், ஸ்ரீவ்வோ, பிறைன் லாறா ஆகியோர் இந்தச் சாதனையைப் புரிந்துள்ளனர்.

ஆனாலும் இந்த 121 ஓட்டங்களைப் பெறுவதில்தான் இப்போது சிக்கல் எழுந்துள்ளது. அதாவது நாளை மறுதினம் முதல் டெஸ்ட் மொஹாலி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. இதுவரை 120 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 193 இனிங்ஸ்களில் 9879 ஓட்டங்களை டெண்டுல்கர் குவித்துள்ளார். ஆனால் குறைந்த இனிங்ஸ்களில் 10 ஆயிரம் ஓட்டங்களை அடித்த பெருமையை கைவசம் வைத்திருப்பவர் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தலைவர் லாறா. 112 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய லாறா 195 இனிங்ஸ்களில் 10 ஆயிரம் ஓட்டங்களைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.


இந்த வகையில் பார்க்கும்பொழுது மொஹாலி டெஸ்டின் முதல் இனிங்ஸில் டெண்டுல்கர் 121 ஓட்டங்களை எடுத்தால், லாறாவைவிட ஒரு இனிங்ஸ் குறைவாக 10 ஆயிரம் ஓட்டங்கள் பெற்ற பெருமையை அவர் பெற்றுக்கொள்வார்.

ஆனால் இது எவ்வளவு தூரம் சாத்தியப்படும் என்பதே இப்போது எழுந்துள்ள வினாவாகும். ஏனென்றால் இடது முழங்கையில் ஏற்பட்ட டெனிஸ் எல்போ காயத்தால் இரண்டு மாத ஓய்வில் இருந்துவிட்டு அணிக்குத் திரும்பிய டெண்டுல்கரால் முதல் இனிங்ஸில் சதம் அடிக்க முடியுமா? என்றொரு சந்தேகம் ரசிகர்கள் மனதில் எழாமலும் இல்லை. கையில் ஏற்பட்ட வலியும், அத்துடன் ரசிகர்களின் இந்த எதிர்பார்ப்புக்களும் அவரை மேலும் நெருக்கடிக்கு உள்ளாக்கி, அவரின் மனஅழுத்தத்தை அதிகரிக்கச் செய்யும் என்பதிலும் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.





ஆனாலும் பாகிஸ்தான் அணி 1999 ஆம் ஆண்டு இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது, சென்னையில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் தனது கடுமையான முதுகு வலியையும் பொருட்படுத்தாமல், சிறப்பாக விளையாடி சதம் அடித்தமையை ரசிகர்கள் அவ்வளவு சுலபத்தில் மறந்துவிடமாட்டார்கள். டெண்டுல்கர் ஒருநாள் போட்டியிலும் சதம் அடித்தே பத்தாயிரம் ஓட்டங்களைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.



சச்சின் டெண்டுல்கர்
ஓட்டங்களின் ஊற்று

இதனைவிட இந்தத் தொடரில் பல்வேறு சாதனைகளை முறியடிக்க டெண்டுல்கருக்கு வாய்ப்புக்கள் உள்ளது. இந்தத் தொடரில் ஒரு சதம் அடித்தால் டெஸ்ட் போட்டிகளில் அதிக சதம் (34)அடித்த சுனில் கவாஸ்கரின் சாதனையை முறியடித்துவிடுவார். அத்தோடு இந்தத் தொடரில் மொத்தம் 244 ஓட்டங்கள் பெற்றால் இந்தியாவிலேயே அதிகூடிய டெஸ்ட் ஓட்டங்களைப்பெற்ற கவாஸ்கரின் சாதனையான 10122 ஓட்டங்களைக் கடந்த பெருமையையும் சச்சின் படைப்பார்.

மும்பை வீரர்களான கவாஸ்கருக்கும் டெண்டுல்கருக்கும் இடையே சில ஒற்றுமைகளை அவதானிக்கலாம். இந்த வகையில் கவாஸ்கர் டெஸ்ட் போட்டிகளில் பிரட்மன் பெற்ற 29 சதங்களை முறியடித்ததும், டெண்டுல்கர் அந்தச் சாதனையை முறியடித்ததும் அவர்களுடைய 99ஆவது டெஸ்ட் போட்டியிலேயாகும். அவ்வாறே டெஸ்ட் போட்டிகளில் 34 சதங்களை இருவரும் பெற்றுக்கொண்டதும் தங்களுடைய 119ஆவது டெஸ்ட் போட்டியிலேயாகும். இந்த வரிசையில் தற்போது இன்னொன்றும் இணையவுள்ளது. அதாவது கவாஸ்கர் 10ஆயிரம் ஓட்டங்களைப் பெற்றது சொந்தமண்ணில்பாகிஸ்தானுக்கு எதிராகத்தான். அதேபோன்ற சந்தர்ப்ப சூழ்நிலையேடெண்டுல்கருக்கும் ஏற்பட்டுள்ளது.

2001/02 காலப்பகுதியில் அவுஸ்ரேலியாவுக்கு எதிராக இந்தியாவின் இந்தூர் மைதானத்தில் நடைபெற்ற ஒருநாள் போட்டியொன்றில், ஷேன் வோனின் பந்தை Deep Mid - Off திசையில் அடித்து தனது 10 ஆயிரமாவது ஓட்டத்தைப்பெற்ற டெண்டுல்கர், டெஸ்ட் போட்டிகளில் யாருடைய பந்துவீச்சில், எந்த மைதானத்தில் 10 ஆயிரம் ஓட்டங்களைப் பெறவுள்ளார் என்பதும் சுவையான ஒரு எதிர்பார்ப்பே.

**- விமலன்.**



நிகரே இல்லை

# கட்டிலேறும் அட்டைகள்

தேசியக் கொடிகள் அல்லது அதன் நிறங்கள் ஒருமித்துப் பயன்படுத்துவது தொடர்பில் இந்திய உள்துறை அமைச்சு கட்டுப்பாடு விதித்துள்ளது. இதன் படி விளையாட்டு வீரர்கள் மூவர்ணக் கொடியின் மாதிரியை தமது உடையிலோ, உபகரணங்களிலோ பயன்படுத்துவது இந்திய உள்துறை அமைச்சால் தடை செய்யப்படுகிறது.

எனவே இந்திய - பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டிகளின் போது சச்சின் தனது தலைக்கவசத்தில் மூவர்ணங்கள் கொண்ட அடை யாளத்தையோ, கங்கூலி தனது கையுறைகளில் மூவர்ண (ஒரேஞ், வெள்ளை, பச்சை)ப் பதிவையோ பாவிக்கமுடியாது.

இதனைப் பற்றி இந்திய விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் தத் தனிப்பட்ட கருத்துக்கூறுகையில் - மூவர்ணத்தை கிரிக்கெட் வீரர்கள் பயன்படுத்துவதை தான் ஆதரிப்பதாகக் கூறியுள்ளார். எனினும் உள்துறை அமைச்சின் அறிவுறுத்தல்களை கடைப்பிடிக்கவேண்டியது தனது கடமை என்றும் கூறியிருக்கிறார். முதற்சொன்ன இரண்டு வீரர்களும் இதனை ஏற்றுள்ளார்கள். ஆனால் சிலருக்குக் கொஞ்சம் மன வருத்தம்தான். நான் மூவர்ணம் பொறிக்கப்பட்ட தலைக்கவசத்துடன் விளையாடும்போது, பெருமிதத்தை உணர்கிறேன் என்று யுவாஜ் சிங் கூற, ஒலிம்பிக் வெள்ளிப் பதக்க வீரர் ராஜ்வர்தன் ரத்தோர் - தேசியக்கொடி பொறித்த மேலங்கியை அணியும்போதே மிக உயர்வொன்றை நான் உணர்பவன் என்பவர், வேறு நாட்டு வீரர்கள் தத்தம் தேசியக்கொடியை அணிந்திருக்க, நான் அது இல்லாமல் இருப்பது ஏதோ தனித்துவிடப்பட்ட உணர்வைத்தான் ஏற்படுத்தும் என்று மனம் வருந்துகின்றார்.

ஆனால் FORMULA ONE ஓட்டப்பந்தய வீரர் நரேன் கார்த்திகேயன் கூறும் கருத்து அத்துணை நாகரிகமிக்கதாகத் தெரியவில்லை. அப்படித்தானென்றால், அது அரசின் இழப்பாகவே இருக்கும். எனது ஹெல்மெட்டில் உள்ள தேசியக் கொடிக்கான இடத்தை வர்த்தக விளம்பரத்துக்குக் கொடுத்தால், கைநிறையக் காசு உழைப்பேன் என்று கூறியிருக்கிறார். தேசியக் கொடி காத்த குமரன் பிறந்த மண்ணில் இப்படியும் ஒரு பிறவி நரேன் கார்த்திகேயன் - FORMULA ONE எனும் மிகக் கடினமான பெருமை மிக்க மோட்டார்கார் பந்தயத்தில் கலந்துகொள்ள அவுஸ்ரேலியா செல்லவுள்ளார். ஆனால் தேசியக் கொடியின் மகத்துவத்தை எந்த மட்டத்தில் ஒப்பிட்டுக் கதைத்துள்ளார் என்பது மிகவும் துயரமானது. இப்படி ஒரு ஒப்பீடு வந்தமைக்குக் காரணம் இவரது அறியாமையா அல்லது புதிய அனுபவத்தின் மிதப்பா என்று தெரியவில்லை. தேசியக்கொடியை மதிக்கத்தெரிந்த அவர், அதனை ஒப்பிட முனைந்தமைதான் விசித்திரமானது. ஆனால் எப்போதும் முரண் கருத்துகளைக் கூறும் பிஷன் சிங்பேடி அரசாங்கத்தின் கொள்கையை ஆணித்தரமாக ஆதரித்துள்ளார். தேசியக்கொடி விவாதத்துக்குரியதல்ல என்பதே உண்மை.



சுனில் தத்
தேசபக்தி முதல்

**- ஜோசப் கிருஷ்ணா.**

# பந்தயம்பிடி கெடுகிறேன்

முன்பெல்லாம் டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டங்கள் BBC இல் ஒலிபரப்புச் செய்யப்படும். அந்தக் காலத்தில் பிரபல்யமான ஒலிபரப்பாளர்கள் நேரடி வர்ணனையாளர்கள் என்றால் மேற்கிந்தியத் தீவுகளைச் சேர்ந்த ரோனி கோசியர். இங்கிலாந்தின் கிறிஸ் தோபர் மார்டின் ஜென்சின்ஸ் போன்றவர்கள் தான். இங்கு குறிப்பிடப்பட்ட ரோனி கோசியர் மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியின் ஏற்ற இறக்கங்கள் எல்லாவற்றையும் பல தசாப்தங்களாக அவதானித்து வருபவர்.

மேற்கிந்தியத் தீவுகளின் இறுதிக்காலம் வந்துவிட்டது போலத் தோன்றுகிறது என்கிறார் அவர். மெல்ல மெல்ல மேற்கிந்தியக் கிரிக்கெட் அணி மறக்கப்படக் கூடிய நிலைக்கு வந்து கொண்டிருக்கிறது. அதுவும் விரைவில் வந்துவிடுமோ என்று அச்சமாக இருக்கிறது என்று கவலைப்படுகிறார் ரோனி கோசியர். கடந்தவருடம் சம்பியன் கிண்ணப் போட்டியில் இங்கிலாந்தை அற்புதமாகத் தோற்கடித்து கிண்ணத்தை வென்றதோடு எல்லாம் சரி. அதன்பின் பெரிதாகப் பேச எதுவுமே இல்லை. பென்னட் கிங் பயிற்றுனராகக் கடமையேற்றபின்னர் பெரிதாக அணித்திறமை என்று பார்த்தாலும் ஒன்றையும் காணோம். கண்ணுக்குத் தெரிவது வேறு விடயங்கள்தான். விளையாட்டு வீரர்கள் ஒப்பந்தச் சிக்கல்கள். அணியில் இருந்து வீரர்கள் வெறியேறும் பயமுறுத்தல்கள் வெளியேற்றப் படலாம் என்ற அச்சுறுத்தல்கள். அவுஸ்ரேலியாவில் மேற்கிந்திய விளையாட்டு வீரர்கள் களியாட்டங்களில் ஈடுபட்டு பெயரைக் கெடுத்துக்கொண்டமை இறுதியாக DIGICEL நிறுவனத்தின் SPONSER கடப்பாடுகளைச் சரிவர நிறைவேற்ற மேற்கிந்திய வீரர்கள் தவறியமை என்று எல்லாமே மேற்கிந்தியக் கிரிக்கெட் பொறுத்து திசைமாறிக் கொண்டுதான் போகிறது.



சர்வான்
தூரத்துப் பச்சை

தற்போது மேற்கிந்திய கிரிக்கெட்சபை ஐந்து மில்லியன் அமெரிக்க டொலர்கள் நட்டத்தில் இருக்கிறது. இதேவேளை DIGICEL நிறுவனம் மேற்கிந்திய கிரிக்கெட் அணியுடன் இருபது மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான ஒப்பந்தம் செய்யும் நிலையில் மேற்கிந்திய கிரிக்கெட் வீரர்களின் பொறுப்பற்ற நடத்தை இந்த ஒப்பந்தத்தை இழக்கச் செய்யும் நிலையில் கொண்டுபோய்விட்டால் மேற்கிந்திய கிரிக்கெட் சபையின் நிலை என்னவென்று அங்கலாய்க்கிறார் ரோனி கோசியர்.



பிறைன் லாறா
சோகம்தான் மிஞ்சும்

மேற்கிந்திய கிரிக்கெட் வீரர்கள் சங்கம் எதற்கும் இணங்கிப் போகாது ஒரு நிலையைப் பின்பற்றுவது மிகவும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். கிரிக்கெட் சபைக்கும், கிரிக்கெட் வீரர்களுக்கும் இடையிலான முரண்பாடுகள் அதிகரித் துக்கொண்டே செல்கின்றன. அதுவும் எதிர்வரும் தென்னாபிரிக்க மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு எதிரான போட்டித் தொடர் குறித்து ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்ப டும் நிலை வரும்போது. இந்த விரிசல் பாரிய பிளவாக உருவாகும் என்று கூறுகிறார் ரோனி கோசியர்.

இந்த நிலையில் DIGICEL நிறுவனம் பாரிய தொகை ஒன்றுக்கு ஒப்பந்த உடன்படிக்கைக்கு வந்துள்ளதை. மேற்கிந்திய வீரர்கள் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஏனெனில் பல நிறுவனங்கள் ஏற்கனவே மேற்கிந்தியத் தொடர்புகளைத் துண்டித்து பின்வாங்கி விட்டன.

ஆகவே கடலில் தத்தளிக்கும் ஒருவருக்குச் சரியான மிதவை ஒன்று கிடைத்திருக்கிறது. இதனைத் தவறவிட்டால் கஜானா காலியான மேற்கிந்திய கிரிக்கெட் சபைதான் மிஞ்சும். அதன் பின் சபையை மூடவேண்டியதுதான். இதற்கான முழுப்பழியும் கட்டுக்கடங்காமல் நடந்துகொள்ளும் மேற்கிந்திய கிரிக்கெட் வீரர்களையே போய்ச் சேரும் என்று எச்சரிக்கிறார் இவர். மேற்கிந்தியத் தீவுகளில் உதைபந்தாட்டம், கூடைப்பந்தாட்டம் போன்றவை ஏன் இவ்வளவு வேகமாகப் பரவி வருகிறது என்பதற்குத் தற்போது சில விளக்கங்கள் கிடைக்கும் போலத்தான் தெரிகிறது.

**-மகடலின்**

# உண்மை பேசாதே



இன்சமாம்
பணிவு நல்லதே

பாகிஸ்தான் அணியின் கிரிக்கெட் பயிற்றுனர் பொப் வூல்மர். அண்மையில் அவுஸ்ரேலியாவில் நடைபெற்ற முத்தரப்பு ஒருநாள் போட்டித் தொடரின் இறுதிக் கட்டமான BEST OF THREE ஆட்டங்களில் 2 - 0 என்ற வகையில் பாகிஸ்தான் தோற்றுப் போயிற்று. இதனைப் பொப் வூல்மர் தன் சார்பாக நியாயம் எனக் கருதும் விமர்சனத்தை முன்வைத்தார். அதாவது மத்தியஸ்தர்கள், அவுஸ் ரேலிய அணி வீரர்களின் APPEAL களினதும், அவுஸ் ரேலிய ரசிகர்களின் செயற்பாடுகளினதும் மறைமுகத் தாக்கத்துக்கு உட்பட்டு விட்டார்கள். இதனால் பாகிஸ்தானுக்குப் பாதகமான பல தீர்ப்புகள் மத்தியஸ்தர்களினால் வழங்கப்பட்டன என்று குற்றஞ்சாட்டினார் வூல்மர்.

வூல்மர் தனது அதிருப்தியை வெளியிட்டமையை, ICC தனது சட்டக் கோவையின் ஊடாகப் பார்த்து அது தண்டனைக்குரிய குற்றமாகக் கருதுகிறது போலத்தெரிகிறது. ICC அதிகாரி மல்கம் ஸ்பீட் கருத்துக்கூறும் போது - ஒரு ஆட்டம் தொடர்பான சம்பவத்தைப் பகிரங்கமாக விமர்சிப்பது அல்லது பொருத்தமற்ற கருத்தில் கூறுவது ஒழுக்கக் கோவையை மீறுவது என்று கூறியிருக்கிறார். இதற்கான தண்டப்பணம் இவரது ஆட்ட ஊதியத்தின் ஐம்பது வீதத்தில் இருந்து நூறு வீதமாக, அல்லது ஒரு டெஸ்ட் ஆட்டம் அல்லது இரண்டு டெஸ்ட் ஆட்டத் தடை என்றவாறு அமையும். ஆனால் உத்தியோகத்தர்கள் ஆட்ட ஊதியம் பெறுவதில்லையென்றாலும், வீரர்களின் ஆட்ட ஊதியத் தொகை இங்கு பொருத்தமாக அமையும். ஆட்டத்தடை என்பது பொருந்தாது.

இதெல்லாம் ஒருபுறம் இருக்க மீண்டும் மீண்டும் நடுவர்கள் தவறு விடுதல் தொடர்ந்துகொண்டே இருக்கின்றது. சர்ச்சைகளும் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. ஆனால் வெற்றிகள் தோல்விகளாகவும், தோல்விகள் வெற்றிகளாகவும் மாற்றம் பெறும் துர்ப்பாக்கிய நிலைக்கு நடுவர்கள் தீனிபோடும் முதல்வராக இருக்கிறார்கள். அணிகள், அணித் தலைவர்கள், பயிற்றுனர்கள் தோல்விகள் அடையும்போது துன்பத்துக்கும், தண்டனைக்கும் ஒரு பகுதிப் பழியை நடுவர்களும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் என்ற நிலை உருவாகிவிட்டது. அதனை ஏற்றுக் கொள்பவர்களா அல்லது "GENUINE MISTAKE" என்று சொல்லிச் சொல்லியே அணிகளுக்கு அள்ளிவைக்கப் போகிறார்களா என்ற வினா எழும்.



பொப் வூல்மர்
கதம்பக்கலவை

அதேவேளை பொப் வூல்மரின் அதிகப் பிரசங்கித்தனத்தையும் இங்கு குறிப்பிட வேண்டும். வெற்றி வாய்ப்பு இந்தியாவுக்கே என்று இந்தியர்கள் சொன்னால் பரவாயில்லை. இப்படிச் சொல்லி இருப்பது பொப் வூல்மர். தன் குழந்தையைத் தானே தாழ்த்தும் தாய் இருப்பாளா? அப்படிப்பட்ட நிலைதான் வூல்மருக்கு. இதிலும் ஆச்சரியம் இல்லை. பணத்துக்காக வேலைக்கு வந்தவருக்கு பாகிஸ்தான் என்ற தேசிய உணர்வு இருக்கவும் நியாயமில்லை தான் இந்தப்பரிமாணத்தை உணர்ந்தோ என்னவோ பாகிஸ்தானியர்கள் பெரிதாக இதுபற்றி கவலைப்படவில்லை.

ஆனால் குறிப்பாக இன்சமாம் ஒருவிடயம் பற்றி தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார். இம்ரான்-இன்சமாம் பற்றியும், அணிபற்றியும் கொஞ்ச நாட் களுக்கு முன் முரண் கருத்துக்கள் பல கூறியிருந் தார். ஆனால் இப்போது தன் எண்ண நிலைப்பாட்டை மாற்றி அணிக்கு ஆதரவாகப் பேசியுள்ளார். இதைப்பற்றி இன்சமாம் கருத்துக் கூறுகையில் - இம்ரான் எனது ஆதர்ஸம். மேலும் பாகிஸ்தான் கிரிக்கெட்டுக்கு GOD FATHER. அவர் எங்களுக்கு உற்சாகமான வார்த்தைகளையும் நம்பிக்கையை யும் தந்திருப்பது எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது என்கிறார். உண்மை இன்சமாமின் வார்த்தைகள் எவ்வளவு பக்குவம் நிறைந்த நாகரிகமான வார்த்தைகள் இன்ஸமாம் மனதில் நிற்கிறார்.

- நிர்மலன்

# நிலவை மறைக்கும் கருமுகில்



கிளார்க்
தேவை தனித்துவம்

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் ஒவ்வொரு நாட்டு தேசியக் கிரிக்கெட் அணிகளிலும் தற்போது புதுமுக வீரர்களின் வருகை பெருமளவில் அதிகரித்துள்ளது என்று கூறுமளவு நிலைமை உள்ளது.

இதற்குக் காரணம் ஒவ்வொரு நாட்டு அணிகளுக்கும் புதிய வீரர்களிடமிருந்து பெருமளவில் எதிர்பார்க்கைகள் இருப்பதற்காகக் கூட இருக்கலாம். இந்த வகையில் அண்மைக் காலங்களை எடுத்துக்கொண்டால், அவுஸ்ரேலியாவில் கிளார்க், கூரிச், ஹூசே இங்கிலாந்தில் பீற்றர்சன் தென்னாபிரிக்காவில் பச்சர், கெம்ப் உட்பட பலர். பாகிஸ்தானில் இம்ரான் நசீர், தௌபீக் உமர், இம்ரான் பர்கத், சல்மான் பட், இந்தியாவில் ஷேவாக், யுவராஜ் சிங், கைவ், இர்பான் பதான் ஆகியோர் அந்த நாட்டு அணிகளுக்குள் குறித்த சில காலப்பகுதிக்குள் வந்தவர்கள்.

இந்தவீரர்கள் அனைவரும் அந்தந்த நாடுகளின் உள்ளூர் போட்டிகளில், உள்ளூர் பயிற்சியாளர்களின் பயிற்றுவிப்பில் சிறப்பாக விளையாடி தமது திறமைகளை வெளிக்காட்டிய காரணத்தாலேயே தேசிய அணியில் இணைக்கப்பட்டனர். இவ்வாறு தேசிய அணியில் இணைக்கப்பட்ட இந்த வீரர்கள், தமது முதலாவது அல்லது அடுத்து வரும் போட்டிகளில் சிறப்பாகவிளையாடி சதங்களாகவோ, அரைச் சதங்களாகவோ பெற்று அனைவரது பாராட்டுதல்களையும் பெற்றனர்.

ஆனால் தொடர்ந்து வரும் போட்டிகளில் இவர்கள் முன்னர் காட்டிய திறமைகளை வெளிக்காட்டாத காரணத்தால், பலரின் அதிருப்திக்கும் ஆளாவதோடு, அணியிலிருந்து நீக்கப்படும் அளவிற்கும் சென்று விடுகின்றனர். இதற்கு சிறந்த உதாரணம் பாகிஸ்தானின் இம்ரான் நசீர்.



பச்சர்
வந்தது வசந்தம்

இதில் இன்னுமொன்றையும் குறிப்பிட வேண்டும். அவுஸ்ரேலிய அணிக்கான வீரர்கள் தெரிவென்பது சற்று வித்தியாசமாகத்தான் உள்ளது. ஏனெனில் புதுமுக வீரர் கிளார்க் உட்பட வரும் வீரர்கள் சகலதுறைகளிலும் அசத்துவது தான்.

தவிர மற்றைய அணி வீரர்களின் தெரிவு ஏன் இவ்வாறு இடம் பெறுகிறது. உண்மையிலேயே உள்ளூர் பயிற்சியாளரின் வழிகாட்டுதலில் சிறப்பாக விளையாடி தேசிய அணிக்கு இணைக்கப்படும் இவர்கள், தமது ஓரிரு போட்டிகளில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய போதிலும், பின்னர் ஏன் இவர்களால் சோபிக்க முடிவதில்லை? அவ்வாறெனில் தேசிய அணியின் பயிற்றுவிப்பாளர் இவர்களுக்கான பயிற்சியை வழங்குவதில் தவறு விட்டுள்ளாரா? அல்லது 18, 19, 20 வயதுகளில் வீரர்களை உள்வாங்கிய பின்னர் முதல் போட்டிகளில் இளமைத் துடிப்பாக விளையாடும் இவர்கள், பின்னர் சரியாக விளையாடாத நிலையில் சகலரும் சிறந்த வழிகாட்டுதலை தெரிவிக்காமல் அவர்களை பலிக்கடாவாக்குகின்றார்களா? போன்ற பல்வேறு விடயங்களை கவனத்தில் கொள்ளவேண்டியுள்ளது.

பாகிஸ்தான் சென்ற இந்திய அணியில் டெஸ்ட் போட்டிகளில் 309 ஓட்டங்களைக் குவித்த ஷேவாக், தான் ஒருநாள் போட்டிகளில் இரட்டைச் சதமடிக்கப் போவதாகத் தெரிவித்திருந்தார். ஆனால் அன்றிலிருந்து இன்றுவரை அவரின் நிலை கவலைக்கிடமாகவே உள்ளது. அண்மையில் இந்திய உள்ளூர் போட்டிகளிலும் அவர் 30 ஓட்டங்களுக்கு மேல் பெறவில்லை. இதேநிலைதான் யுவராஜ்சிங்கிற்கும். ஆனால் கைவ் இதில் விதிவிலக்கு.

இதுபோலவே பாகிஸ்தானிலும் பல வீரர்கள் சொற்ப காலங்களில் வந்து சென்றுள்ளனர். இது தமிழ் சினிமாவில் சில நடிகர்கள் சில படங்களில் கௌரவத் தோற்றத்தில் வந்து செல்வது போல உள்ளது. அந்த அணியில்இம்ரான் நசீர், யாசீர் ஹமீட், இம்ரான் பர்கத், தௌபீக் உமர் தற்போது சல்மான் பட் என பட்டியல் உள்ளது.

எனவே தேசியஅணிக்கு வீரர்களைத் தெரிவுசெய்யும் போது, இதனை சகலரும் கவனத்தில் எடுப்பார்களா? என்பதே இன்றுள்ள மிகப் பெரிய கேள்வியாகும்.

—யசோ.

# கின்னஸுக்கா நோபலுக்கா போட்டி?



டரெல் கார்ப்பர்
இப்போ தலை சுழல்கிறதா?

சந்தேகத்துக்கிடமானபந்துவீச்சுச் சாயலைக் கொண்டவர்கள் என்று சுட்டப்படுபவர்கள் மார்ச் முதலாம் திகதியிலிருந்து சுதந்திரம் பெற்றவர்கள் ஆவார்கள். ஏனெனில் பந்து வீச்சாளர்கள் தம் கரங்களின் சுழற்சியை பதினைந்து பாகைவரை கொண்டு செல்லலாம் என்று தீர்மானித்து விட்டார்கள். எனவே சரியான LBW களையும் RUN OUT களையும் கோட்டைவிட்டு, விட்டு எங்கே பந்து வீச்சாளன் கையை எந்தளவு சுழற்றுகிறான் என்பதிலேயே கரிசனையாக இருந்த நடுவர்களுக்கு, இதுஒரு ஏமாற்றமாகத்தான் இருக்கும்.

ஆனால் நடுவர்கள்கூட பலவிடயங்களில் சொந்தக் காலில் நிற்பதில்லை என்பது இப்போது தெளிவான தொருவிடயம். ஏனெனில் கர்மமே கண்ணாக இருப்பது போல் கூர்ந்து முதுகை வளைத்துப் பார்த்துவிட்டு ஏதோ பவிலியனை நோக்கி ஆசீர்வதிப்பதைப் போல, இரண்டு கைகளாலும் தொலைக்காட்சிப்பெட்டியின் நீள அகலப்பாங்கை சைகையாகக் காட்டுவதே அவர்களது பாணியாகி விட்டது.

எனவே அவர்களின் பணி மைதானத்துக்கு அப்பால் உள்ளவர்களிடம் யாசகம் கேட்பதாக இல்லாமல், தாமே தம்முடிவைத் தெரிவிக்கும் துணிவைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்று எல்லோரும் எதிர்பார்க்கிறார்கள். ஏனெனில் பந்துவீச்சாளர்களில் பாவம் செய்தவர்களைக் கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்தி, பந்து வீச்சைப் புனிதப்படுத்தும் கடமை அவர்களை விட்டுப் போய் விட்டது.

TV பெட்டிக்கு முன்னால் இருப்பவர்களும் பந்து வீச்சாளர்களின் வளைவு நெளிவுகளைப் பற்றி மணிக்கணக்காக அலம்பிக்கொண்டிருக்காமல், உபயோகமான வேறு விடயங்களைப் பற்றிப் பேசலாம். என்றாலும் இவர்கள் இலத்திரனியல் சாதனங்களின் முன்னால் இருப்பவர்கள். ஆகையால் எங்கே அந்தப் பதினைந்து பாகை என்று கண்ணுக்குள் எண்ணெய் விட்டுக்கொண்டிருப்பார்கள். அதையே ஏதோ விஞ்ஞானக் கண்டுபிடிப்புப்போல விசேட முக்கியத்துவம் கொடுத்து பிரபல்யப்படுத்தவும் முனைவார்கள். ஆனால் மைதான மத்தியஸ்தர்கள், ஆட்ட மத்தியஸ்தர்கள், TV வர் ணனையாளர்கள் யாருக்கும் நோபல் பரிசு கிடைக்கப்போவதில்லை.



டரெல் ஹெயர்
தேவை நேர்கொண்ட பார்வை

— அன்ரனி.

விளையாட்டு அரங்கம்


EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...


தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com

# சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வவுனியா மாதர் சங்க சமாசத்தினால் அறிக்கை

1911 ஆம் ஆண்டிலிருந்து உலகப் பெண்களால் முன்னெடுக்கப்பட்டு, வெற்றிகொள்ளப்பட்ட போராட்டங்களின் வெற்றி நாளாக மார்ச் 8 ஆம் திகதி பெண்கள் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

நாட்டின் சமாதான காலத்தில் கொண்டாடப்படும் மூன்றாவது மகளிர் தினம் இதுவாகும். சமாதானம் என்ற சொல் பலர் மத்தியில் பேசப்படுகிற ஒன்றாக இருந்தாலும் கூட, அதன் பெறுமதி எவ்வளவு காத்திரமானது: உண்மையானது என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது. இந்த நிலையில் பெண்களுக்கெதிரான வன்முறையும், சிறுவர்கள் மீதான துஸ்பிரயோகமும் தீர்க்கமுடியாத பிரச்சினையாகவே தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இவ்வாறு சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, வவுனியா மாவட்ட மாதர் சங்க சமாசத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது –

பெண்களின் உரிமைகளையும், அவர்களது அன்றாட வாழ்வின் சுமைகளையும் கருத்தில் எடுத்து– அதற்கான தீர்வொன்றை எட்ட வேண்டிய கட்டாயக்கடமை அனைவருடையதுமாகிறது.

சர்வதேசம் பெண்களிலிருந்து வேறுபட்டு, தமிழ்ப் பெண்களாகிய நாம் பல தசாப்தங்களாகப் போரின் நெருக்கடிகளில் சிக்குண்டு, எமது இயல்பு வாழ்க்கையை முற்றாக இழந்துள்ளோம்.

எமது பெண்கள் இராணுவ வன்முறைகளாலும், எல்லைப்புற சிங்களக் குடியேற்றங்களாலும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

கடந்த காலங்களில் மிகமோசமான இடப்பெயர்வுகளாலும், இராணுவ நடவடிக்கைகளாலும் குடும்பத் தலைவர்களை இழந்து தவிக்கும் பெண்கள் அநேகர். அவர்கள் வாழ்ந்த பெரும் பகுதி நிலங்கள் இராணுவத்தினரின் உயர் பாதுகாப்பு வலயங்களாக்கப்பட்டு, இவர்கள் வசதிகளற்ற இடங்களில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

சுனாமி கடற்கொந்தளிப்பு காரணமாகப் பாதிக்கப்பட்ட, உறவுகளை இழந்த பெண்கள் இன்று வரை எந்த நிவாரணங்களையும் பெறமுடியவில்லை. இவர்களுடைய எதிர்காலம் கேள்விக்குறியாகவுள்ளது.

சமாதான முன்னெடுப்புகளுக்காக யுத்த முயற்சிகள் நிறுத்தப்பட்டு மூன்று ஆண்டுகள் கடந்த போதும், இன்றுவரை எம் மக்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை.

விடுதலைப்புலிகள் அமைப்பால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களின் மீது தேவையற்ற முறையில் களங்கம் சுமத்திவரும் அரசு– இதுவரை இராணுவக்கட்டுப் பாடற்ற பிரதேசத்தில் இயங்கி வரும் சிறுவர் நல அமைப்புக்களை ஏற்கவில்லை.

சிறுவர்களைக் கொடூரமான விமானக் குண்டுவீச்சுக்களாலும், ஷெல் வீச்சுக்களாலும் கொன்றொழித்த அரசு – அதனை மறந்து விடுதலைப்புலிகள் படையில் சேர்ப்பதாகப் பொய்ப்பிரசாரத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளமை கண்டிக்கத்தக்கதாகும்.

போர்நிறுத்த காலப்பகுதியில் ஆயுதமின்றி நடமாடிய போராளிகளான கௌசல்யன் உட்பட ஐந்து பேரை – தமது எல்லைக்குள் வைத்துச் சுட்டுக்கொன்ற செய்கை, சமாதானத்துக்கு விரோதமானது என்று ஐ.நா செயலாளர் கொபி அனானைப் பாராட்டுவதோடு, இந்தச் செய்கையைச் செய்தவர்களுக்கு ஆதரவு கொடுத்த அரசை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அத்தோடு, கடந்த 28.02.2005 அன்று அரசியல் பணியில் ஈடுபட்டிருந்த விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு – அம்பாறை அரசியற்துறை மகளிர் பொறுப்பாளர் குவேனி, உதவிப் பொறுப்பாளர் சசிமதி மற்றும் போராளி அகநிலா ஆகியோர் சமாதான காலத்துள் ஆயுதம் தாங்கிய சில விரோத சக்திகளால் சுடப்பட்டமையையும் கண்டிப்பதோடு, விரைவில் உண்மைக் குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டுமெனவும், அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.

கடந்த பல தசாப்தங்களாகப் பெண்களின் குழுக்களும், ஏனைய உள்ளூர் தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களும் அளப்பரிய முயற்சிகளை மேற்கொண்டு வந்துள்ள போதிலும், பெண்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்களும் அதிகரித்துக்கொண்டே செல்கிறது.

இலங்கையில் ஏறக்குறைய 60 வீதத்துக்கும் மேற்பட்ட பெண்கள் – வீட்டு வன்முறையால் பாதிக்கப்பட்டு வருகிறார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

வீட்டு வன்முறையை ஒரு மனித உரிமை மீறலாக நாம் ஒப்புக்கொள்ளவேண்டும். அதனை இனி மேலும் நாம் சகித்துக்கொள்ளக் கூடாது.

அதற்கெதிரான நடவடிக்கைகளில் தீவிரமாகச் செயற்படவேண்டியது எங்கள் அனைவரின் கைகளிலுமே தங்கியுள்ளது.

பெண்களின், சிறுவர்களின் பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதற்கும், அதன் மூலம் வன்முறையற்ற சூழலை உருவாக்குவதற்கும் நாம் அனைவரும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டும்.

வீட்டு வன்முறை உட்பட எல்லா வகையான வன்முறைகளையும் குறைப்பதற்கு நாம் ஒன்றுபடுவோமாக.

அதன் ஓர் அங்கமாக பொலிஸ் நிலையங்களில் பெண்கள், சிறுவர்கள் முறைப்பாடு தொடர்பாக தனியான கருமபீடங்கள் நாடு முழுவதும் அமைக்கப்பட்டு, பெண் உத்தியோகத்தர்களை நியமித்து, அவர்களுக்குரிய பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு வழங்கப்பட வேண்டும்.

பெண்ணின் எழுச்சிக்கு வித்திட்டு நிற்கும் இந்நாளில் – பெண்களின் சுபீட்சமான வாழ்க்கைக்கும், அவர்களது சுதந்திரத்துக்கும் இடையூறு செய்பவர்களைக் கண்டிப்பதுடன், எமது வேண்டுகோளை ஏற்று சர்வதேசம் எம் பெண்களின் முன்னேற்றத்துக்கு உதவ வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, இந்தப் பெண்கள் தினத்தில் தங்களைத் தயவுடன் கேட்டுக்கொள்கிறோம். இந்தப் பெண்கள் தினத்தில் சர்வதேச பெண் சமூகத்துடன் எமது கரங்களையும் இணைத்துக் கொள்கின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(03)

# கிளிநொச்சி-மல்லாவி பிரதேசத்தில் தோற்பொருள் பயிற்சி நிலையம்

(கிளிநொச்சி)

மல்லாவிப் பிரதே சத்தில் சமுதாய முன்னேற்ற நிலையமும், ஐ.ஓ.எம் நிறுவனமும் இணைந்து நடத்துகின்ற தோற் பொருள் உற்பத்தி பயிற்சி நிலையம் ஒன்று – கடந்த புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு சமுதாய முன்னேற்றநிலையத்தை சேர்ந்த கனேஸ்வரன் தலைமையில் இடம் பெற்றது.


இந்த நிகழ்வில் தேசிய கொடியை முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் ஏற்றிவைக்க, நிலையத்தின் பெயர்ப் பலகையை ஐ.ஓ.எம். நிறுவன வன்னிப் பிரதிநிதி அனுராதன் திரைநீக்கம் செய்து வைத்தார்.

பயிற்சி நிலையத்தை தமிழீழ அரசியற்துறை துணைப் பெறுப்பாளர் சோ.தங்கன் நாடாவை வெட்டி திறந்து வைத்தார்.

இந்த பயிற்சி நிலையம் திறந்து வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, முதற்கட்ட பயிற்சியும் ஆரம்பிக்கப் பட்டது.

போரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வருமான அதிகரிப்பை ஊக்குவிப்பது இந்த பயிற்சித் திட்டத்தின் நோக்கமாகும்.

இந்த பயிற்சித் திட்டத்தில் முதற்கட்டமாக 30 பயிற்சியாளர்கள் இணைக்கப்பட்டுள்ளனர்.



தமிழீழ தேசியத் தலைவரின் 50 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, கிளிநொச்சி - பாரதி வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடத் தொகுதியை முதலாவது படத்திலும், இந்தக் கட்டடத்தின் சான்றிதழ் பத்திரத்தை தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழேந்தி வித்தியாலய அதிபரிடம் கையளிப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். படம் : கடம்பேஸ்




# சர்வதேச மகளிர்தினம் தொடர்பாக முல்லைத்தீவில் கலந்துரையாடல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சர்வதேச மகளிர் தினம் தொடர்பான முன்னோடிக் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்தக் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் ஒட்டுசுட்டான் பிரதேசத்தின் கற்சிலைமடு தமிழ் வித்தியாலயத்திலும், புதுக்குடியிருப்பு நுண்கலைக் கல்லூரியிலும் நடை பெற்றன.

இந்தக் கலந்துரையாடலில் – சிறப்புரைகளை தமிழீழ மகளிர் அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் தமிழ்விழி மற்றும் தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் ஆகியோர் நிகழ்த்தினர்.

இதில் சர்வதேச பெண்கள் எழுச்சிநாளில் முன்னெடுக்கப் படவேண் டிய வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும், பெண்கள் எதிர் கொள்கின்ற பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

# பிற்போடப்பட்டுள்ளது

முல்லைத்தீவில் நடைபெறவிருந்த அடையாள அட்டை வழங்கும் இடம்பெயர் சேவை பிற்போடப் பட்டுள்ளது.

ஆட்பதிவுத் திணைக்களத்தால் சுனாமி கடற்கொந்தளிப்புக் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்காக முள்ளியவளை, புதுக்குடியிருப்புப் பகுதிகளில் – நேற்றும், இன்றும் நடைபெறவிருந்த இடம்பெயர் சேவை பிற்போடப்பட்டுள்ளது.

இந்த இடம்பெயர் சேவை நடைபெறும் திகதிகள் தொடர்பாகப் பின்னர் அறிவிக்கப்படுமென, முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

# சின்னஞ்சிறு செய்திகள்

## 50 கழிப்பறைகள் அமைப்பு

(மன்னார்)

மன்னார் – அந்தோனியார்புரம் கிராமத்தில் டி.ஆர்.சி நிறுவன நிதியுதவியுடன் 50 கழிப்பறைகள் அமைக்கப் பட்டுள்ளன.

வடக்கு–கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தினரால், டி.ஆர்.சி நிறுவனத்தின் நிதியுதவியுடன் – 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் இந்தக் கழிப்பறைகள் அமைக்கப்படடு, மக்களின் பாவனைக்கு கையளிக்கப்பட்டுள்ளன.

## சுகாதார விழிப்புணர்வு கருத்தரங்கு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்கு இடம்பெற்றது.

தமிழீழ சுகாதார சேவையினரின் ஏற்பாட்டில், தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையினரால் - பண்டிவிரிச்சான், பெரியமடு, அடம்பன் ஆகிய பிரதேசங்களில் மக்கள் மத்தியில் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை விரிவுபடுத்தும் நோக்கில் இந்த விழிப்புணர்வு கருத்தரங்குகள் இடம்பெற்றன.

இதில் விழிப்புணர்வுக் கருத்துரைகளை வைத்திய கலாநிதி எழுமதி கரிகாலன் நிகழ்த்தினார்.

## தளவிரிப்புக்கள், பாய்கள் வழங்கப்பட்டன

(கிளிநொச்சி)

கிளிநொச்சி –பூநகரி சுண்ணாவில் தமிழ் வித்தியாலயத்துக்கு, தமிழீழ மாணவர் அமைப்பால் தளவிரிப்புகள், பாய்கள் என்பன வழங்கப்பட்டன.

கிளிநொச்சி கல்வி வலயத்துக்குட்பட்ட இந்தப் பாடசாலையில், தளபாட வசதிகள் அற்ற நிலையில் மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

இவர்கள் நிலத்திலிருந்தே தமது கற்றல் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனைக் கருத்திற்கொண்டு, தமிழீழ மாணவர் அமைப்பினர் - தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் தள விரிப்புகளையும், பாய்களையும் வழங்கினர்.

# இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

## மார்ச் –06

1707 : இங்கிலாந்தும், ஸ்கொட்லாந்தும் இணைந்து யூனியன் சட்டத்தை நிறைவேற்றியதன் மூலம் பெரிய பிரித்தானியாவாக மாறியது.

1900 : பெட்ரோலினால் இயங்கும் மூன்று சக்கர வண்டியையும், காரையும் வடிவமைத்தவரும் உள்ளெரி இயந்திரத்தின் வடிவமைப்பின் முன்னோடியுமான கோட்லிப்வில் ஹெல்ம் டெயிம்ளர் மரணமடைந்தார்.

1918 : பெர்லினில் ஜேர்மனிக்கும், பின்லாந்துக்கும் இடையே சமாதான உடன்படிக்கை ஒப்பமிடப்பட்டது.

◆ : அமெரிக்காவின் கடற்படைப் பயிற்சி நிலையங்களின் அருகில் எட்டு கிலோமீற்றர் சுற்றாடல் பகுதி மதுவிலக்குப் பகுதி என்று அறிவிக்கப்பட்டது.

1943: சிந்துவெளி நாகரீகத்தை கண்டுபிடித்தவரும், சியென் போடாங் என்ற இடத்தில் ஆயிரம் புத்தர் சிலைகள் உள்ள குகையைக் கண்டுபிடித்தவருமான பிரிட்டனின் தொல் பொருள் ஆராய்ச்சியாளர் மார்க் அவுரல் ஸ்டீன் காலமானார்.

◆ : அமெரிக்கா 1460 போர் விமானங்களைப் பயன்படுத்தி முதன் முறையாக பெர்லினின் மீது தாக்குதலை ஆரம்பித்தது.

1957 : முன்னாள் பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளாக இருந்த கோல்ட் கோஸ்ட் , டோகாலாண்ட் என்பன இணைந்து கானா என்ற சுதந்திர நாடு உருவானது.

1967 : தமிழ் நாட்டில் சுதந்திரத்துக்குப் பின் காங்கிரஸ் கட்சி அல்லாத முதல் அமைச்சரவையாக சி.என். அண்ணாத்துரை தலைமையில் தி.மு.க. அமைச்சரவை பதவி ஏற்றது.

தொகுப்பு - சந்துரு

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண*
*நன்னயம் செய்து விடல்.*

*திருக்குறள்*

# நமது நோக்கு

## ஜே.வி.பியின் சிங்கள குடியேற்ற முயற்சி; சமாதானத்திற்கு அடிக்கும் சாவு மணியே!

அரசியலில் குழப்பத்தையும், நெருக்கடிகளையும் உண்டு பண்ணுவதன்மூலம் தம்மைப் பிரபல்யப்படுத்தி, தமது இருப்பை உறுதிசெய்வதிலும், அரசியல்ரீதியில் குறுகிய வழியில் ஆதாயங்களை எட்டுவதிலும் இடது சாரிக்கொள் கைகளில் இருந்து இனவாதக் கொள்கைகளுக்கு தாவி, இன்றைய ஐக்கியமக்கள் சுதந்திரமுன்னணி அரசின் சர் வாதிகார பங்காளிகளாக விளங்கும் ஜே.வி.பி.யினர் தொடர்ந்தும் முனைப்புடன் செயற்பட்டுவருவதை அவ தானிக்கமுடிகிறது.

ஜே.வி.பியின் இந்தச் செயல்கள் நாட்டின் எதிர்கால அமைதிக்கும், சமாதானமுயற்சிகளின் எதிர்கால நகர்வு களுக்கும் எந்தவகையிலும் நன்மை பயக்கப்போவது கிடையாது.

ஜே.வி.பி யினரின் வரலாற்றில் அது இலங்கைக்கோ, சிங்கள மக்களுக்கோ ஏன் பௌத்த சமயத்துக்கோ கூட நன்மைபயக்கும் வகையில் எந்தவிதமான ஆக்கபூர் வமான செயற்பாடுகளையும் மேற்கொண்டதாக வரலாறு இல்லை.

மாறாக 1971 ஏப்ரல் ஆரம்பித்த அவர்களின் முதலாவது ஆயுதம் தாங்கிய கிளர்ச்சி நடவடிக்கையிலிருந்து இன்றுவரையிலான அவர்களது தொலைநோக்குச் சிந்த னையோ, கொள்கைத்தெளிவோ அற்ற போராட்டங் களும், அரசியற் செயற்பாடுகளும் தென்பகுதி மக்களிடையே அச்சத்தையும், பீதியையும் உருவாக்கி ஏராளமான சிங்கள இளைஞர், யுவதிகளைப் பலிகொண்டதுடன் - அப்பாவிப் பொதுமக்களின் உயிருக்கும், உடமைகளுக்கும் அழிவை ஏற்படுத்தியதைத் தவிர வேறெதையும் சாதிக்கவில்லை என்பதே வரலாறு வெளிப்படுத்தும் யதார்த்த நிலையாகும்.

ரோகண விஜேவீரவே - கொள்கையின் அடிப்படையில் முரண்பாடுகளின் மூட்டையாக விளங்கிய ஒருவராவார்.

புரட்சி என்ற மகத்தான சொல்லையும், தோழர் என்ற கௌரவமான பதத்தையும் தனது இலட்சியப் பிடிபற்ற சந்தர்ப்பவாத கோட்பாடுகளால் அவமதித்து, இடதுசாரி களுக்கு இந்தநாட்டில் முன்னொருகாலத்தில் இருந்த தனிப பட்ட மதிப்புக்குக் களங்கம் விளைவித்து அவமானத்தை உண்டுபண்ணியவர்களில் விஜேவீர முதன்மையானவர்.

அவரது அடிச்சுவட்டை தொடர்வதாகக்கூறும் இன்றைய ஜே.வி.பியின் தலைவர்களான சோமவன்ஸ, வீரவன்ச, ரில்வின் சில்வா, நந்த குணதிலக போன்ற அனைவருமே இன்று சமாதானத்தின் விரோதிகளாகவும், விடுதலைப் புலிகளின் எதிரிகளாகவும், பொத்த சிங்கள பேரினவாத்தின இரட்சகர்களாகவும் காட்டிக்கொள்ளும் முனைப்புடன் செயற்பட்டு வருவதை அன்றாடம் செய்தி ஊடகங்களில் வெளிவரும் அவர்கள் குறித்த தகவல்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

இன்றைய ஜே.வி.பியினரின் சகல நடவடிக்கைகளுக் கும் அதனால், தேசியரீதியில் ஏற்படக் கூடிய அழிவுகளுக் கும், அமைதியின்மைகளுக்கும் முழுப்பொறுப்பினை ஏற்க வேண்டியவர் ஜனாதிபதி சந்திரிகா அவர்களேயாவார்.

அவரது பதவியாசையும், சமாதானவிரோத பேரின வாதக் குணாம்சமுமே தனது கணவரையும் படுகொலை செய்த ஜே.வி.பியினருடன் உடன்பாடொன்றை ஏற்படுத்தி, ஆட்சியில் அவர்களுக்கு அதிகளவிலான அதிகார ஆதிக் கத்தையும் வழங்கச் செய்ததுடன் - இன்று அவர்களின் மிரட்டல்களுக்கும், அச்சுறுத்தல்களுக்கும் அடங்கிப் போகவும் வைத்துள்ளது என்றால் மிகையில்லை.

இந்த ஓராண்டுகால ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியில் ஜே.வி.பியினர் காட்டும் அதிகாரத் தன்மை யானது, மீண்டும் இலங்கையில் ஒரு யுத்த காண்டத்தை உருவாக்கும் இலக்கினைக் கொண்டதாகவே உள்ளது.

ஜனாதிபதியை - அரசை, தென்பகுதி மக்களை மட்டு மல்ல இந்தியா, அமெரிக்கா உட்பட முழு சர்வதேச சமூகத்தையுமே தனது பச்சோந்தித் தனத்தின் மூலம் பேய்க்காட்டிவரும் ஜே.வி.பி - தனது தமிழர் விரோத செயற பாடுகள் காரணமாக சமாதான சூழலுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வெளிப்படையான - ஆபத்தான சக்தியாகியுள்ளது.

கடந்த வியாழனன்று திருகோணமலை - மக்ஷெயர் விளையாட்டரங்கின் பிற்பகுதியில் திருகோணமலை மாந கரசபைக்குச் சொந்தமான காணிகளில் இரவோடு இரவாக வீடுகளை நிர்மாணித்து பெரும்பான்மை இன மக்களை அங்கு அத்துமீறிக் குடியேற்ற, ஜே.வி.பி அரசியல்வாதிகளை சலர் இனவாத நோக்குடன் மேற்கொண்ட முயற்சியானது அவர்களின் நாசகார உள்நோக்கத்துக்கு ஒரு சான்றாகும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான தற்காலிக மீள் குடியேற்றம் என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்ட இந்த அடாவடித்தன நடவடிக்கை - தொலைநோக்கு, அரசியல் இலாப நோக்கு சிந்தனையுடன் மேற்கொள்ளப்பட்ட தமிழர் நிலங்களை அபகரிக்கும் செயற்பாடே ஆகும்.

அரச படையினரின் பாதுகாப்புடன் இந்தக் குடியேற்ற ஆக்கிரமிப்பு நடவடிக்கையை அரசின் அத்துமீறல் செயற் பாடாகவும் அர்த்தம் கொள்ளமுடியும். ஜே.வி.பியும் அரசின் முக்கிய அங்கமாக இருப்பதால் இந்த அர்த்தம் கொள்ளலில் நியாயம் இருக்கவே செய்கிறது.


அரசதரப்பிலிருந்து இதுதொடர்பாக இதுவரை எந்த மறுப்பும் தெரிவிக்கப்படாததும் கவனிக்கத்தக்கதாகும்.

இத்தகைய அரச படையினரின் அனுசரணையுடன் கூடிய ஜே.வி.பியினரின் அடாவடித் தனங்களின் எதிரொலியாக ஆபத்தான அரசியல் கொந்தளிப்பு நிலை உருவாகி திருமலையில் பதற்றம் ஏற்பட்டுள்ளதை - அமைதியை வலியுறுத்தும் தரப்பினர்கள் உன்னிப்பாகக் கவனத்தில் கொள்வது அவசியம். இவையாவும் சமாதான விரும்பிகளின செயலாக இருக்கமுடியாது.

சமாதானத்தின் எதிரிகள் அரசுக்குள்ளேயே வலிமை கொண்ட நச்சுக் கிருமிகளாக வளர்ந்து வருகிறார்கள் என்பதுதான் அச்சமூட்டும் செய்தியாகும்.

# நாடும் நடப்பும்

செய்தி:- இராணுவத்திற்கு ஆட்சேர்க்கும் நடவடிக் கையை தீவிரப்படுத்த அரசு முயற்சி.




## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# நெஞ்சில் உறுதியும் நேர்மையும் உண்டு இனியும் எம்மை ஏமாற்ற முடியாது!

நாலைந்து நாட்களாகக் காணாமல் போயிருந்த பரமசிவம் மீண்டும் என்முன் தோன்றினார். வந்ததும் வராததுமாக இனியும் பொறுமை பொறுமையென்று இருந்தால் நல்லாத்தான் தலை யில் மிளகாய் அரைத்துவிடுவார்கள். இப்படித்தானே கடந்த அரை நூற்றாண்டுக்கு மேலாக எங்களை அவர்கள் பேய்க்காட்டி வருந்திருக்கினம். இனியும் நாங்கள் பேயர்களாக இருக்கமுடியாது என்று உரக்கவே பரமசிவம் கூச்சலிட்டார்.

என்ன எங்கேயோ தொலைந்துபோன நீர் வரும்போதே ஆர்ப்பாட்டம் பண்ணிக்கொண்டு வருகிறீர். யாரைப் பேசுகிறீர் என்ன விஷயம்? என்றேன்.

மீண்டும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு பேச்சு வார்த்தை நடத்துவதற்கு எல்லாம் தயாராக இருக்கிறதாம். விடுத லைப் புலிகள் ஒத்துழைக்கவில்லையாம். பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்கு முடிவுகாணவேண்டுமாம். இந்தப் பேச்சு வார்த்தையின்போது புலிகள் கோரும் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பான தன்னாதிக்க சபை அமைப்பது பற்றிப் பேசலாமாம். இதைவிட்டு தன்னாதிக்க சபையை நிறுவுவது பற்றி முதலில் பேச முடியாதாம். இதுதான் அரசாங்கத்தின் இன்றைய நிலைப்பாடாம். அதாவது மீண்டும் இனப்பிரச்சினைத் தீர்வுக்குப் பேச்சுவார்த்தை என்று காலங்கடத்த மீண்டும் ஒரு திட்டம் தயாராகியிருக்கிறது என்றார் பரமசிவம்.

பேச்சுவார்த்தை எந்த அடிப்படையில் நடக்கும். இதற்கு அர சாங்கத்திலுள்ள கூட்டுக் கட்சிகள் எல்லாம் சம்மதம் தெரிவித் திருக்கின்றனவா? சுதந்திரக் கட்சியிலுள்ளவர்கள் எல்லோருமே இதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறார்களா என்றேன்.

ஜனாதிபதி அம்மையார் பேச்சுவார்த்தை என்று சொன்னால் ஆளும் கட்சியாகக் கூட்டுச் சேர்ந்திருப்பவர்கள் எல்லோருமே ஒப்புக் கொள்ளத்தானே வேண்டும் என்றார் பரமசிவம்.

அப்படியொரு கட்டுக்கோப்பு இலங்கையில் இதுவரை ஆட்சிக்கு வந்த கட்சிகளுக்கிடையில் இருந்ததாகத் தெரியவில்லை, இப் போதும் இந்த ஆட்சிக் கூட்டமைப்பிலும் இருப்பதாகத் தெரிய வில்லை. இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பின் அடிப்படையில் பேச்சுவார்த்தை தொடங்கும் என்று ஒருவாரத்திற்குள்ளேயே எப்படி மாறுபாடான கருத்துக்களைக் கொண்ட அறிக்கைகள் வந்து கொண்டிருந்தன என்பதைக் கவனித்தீரா?

அது மட்டுமல்ல விடுதலைப்புலிகளின் தன்னாதிக்க சபைத் திட்டத்தின் மீது அரசாங்கம் பேச்சு நடத்த முன்வந்தால் உடனடி யாகவே நாங்கள் அரசாங்கத்துக்குக் கொடுத்து வரும் ஆதரவை விலக்கிக்கொள்வோம் என்று ஜே.வி.பி தலைவர் சோமவன்ச உறுதியாகக் கூறுகிறார். நாங்கள் எதற்கு அரசாங்கத்திலிருந்து விலக வேண்டும்? விலக வேண்டியவர்கள் வேறுபலர் இருக்கின் றார்கள். நாங்கள் அல்ல என்றார் அமைச்சராக இருக்கும் ஜே.வி.பி யைச் சேர்ந்த ஒருவர்.

இதேசமயம் தமிழ்மக்கள் தங்கள் மக்கள் செறிந்து வாழும் பிரதேசத்தில் தங்கள் மொழிக்கு உரிமை கோருவதும் தங்களது நியாயமான உரிமைகளைக்கோருவதில் என்ன தவறு, அவர்கள் தங்கள் பிரதேசத்தில் இடைக்கால தன்னாதிக்க அதிகாரசபை நிறுவுமாறு கேட்டதில் தவறில்லை. இதை அடிப்படையாகக் கொண்டு பேச்சு நடத்துவதும் தவறில்லை என்று பிரதி அமைச்சர்கள் குழுக் களின் தலைவரும், சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவருமான டிலான் பெரேரா கூறியிருந்தார்.

முன்பு இந்தியப் பொருட்களை புறக்கணிக்கச் சொன்னவர்கள் இன்று தம்மை மாற்றிக் கொண்டிருப்பதுபோல் ஜனாதிபதி கொள் கையை மாற்றிக் கொள்ளவில்லை என்று டிலான் பெரேரா மறை முகமாக மக்கள் விடுதலை முன்னணி என்ற ஜே.வி.பி யைச்சாடி இருந்தார். இதற்குப் பதிலாகத் தான் நாங்கள் ஆளும் கட்சியை விட்டுவெளியேற வேண்டிய அவசியம் இல்லை என்று ஜே.வி.பி அமைச்சர் ஒருவர் சொல்லியிருந்தார். இது ஒன்றும் புதிய விஷய மல்ல 1956 இல் ஆட்சிக்கு வந்த எஸ்.டபிள்யு.ஆர்.டி பண்டார நாயக்கா 1957 இல் தந்தை செல்வாவுடன் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு பேச்சு நடத்தி ஓர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார். இதை எதிர்க்கட்சியான ஜே.ஆர் தலைமையிலான ஐக்கியதேசியக் கட்சி மட்டுமல்ல ஆளும் கூட்டணியான மக்கள் ஐக்கிய முன்னணியி லிருந்த ஜே.எம்.பி.ராஜரத்தினா குழு அமைச்சர் விமலாவிஜய வர்தன போன்றோரும் எதிர்த்தனர்.

இதேபோல் 1960 ஜூலையில் சிறிமா தலைமையில் சுதந்திரக் கட்சி ஆட்சிக்கு வந்தபின் நெற்காணிச் சட்ட மசோதா கொண்டு வந்த போது, ஆளும் கட்சிக்குள் எதிர்ப்பு வந்து, பிலிப் குணவர்த்தனவும், வில்லியம் டி சில்வவும் வெளியேறினர். 1964 ஆம் ஆண்டில் பத்திரிகைத்தடை மசோதா கொண்டுவந்தபோது சி.பி.டி சில்வா குழுவினர் வெளியேறி சிறிமா ஆட்சி கவிழ்ந்தது. இதேபோல் 1965 இல் டட்லி சேனாநாயக்க பல கட்சிகள்ளச் சேர்த்து தேசிய அரசாங்கம் அமைத்தபின் மாவட்டசபை கொண்டுவர முடியாமல் தமிழரசுக்கட்சி வெளியேறியது. இவையெல்லாம் ஆட்சிக்குவரும் கூட்டணிகள் எதையும் செய்யமுடியாது பிளவுபட்டு நிற்பதையே காட்டுகிறது என் றேன்.

இப்பொழுதும் இனப்பிரச்சினைத் தீர்வில் பழையபடி சமாதானப் பேச்சுவார்த்தை என்று இழுத்தடிக்கவும் கூட்டுக்கட்சிகள் தமக்குள் முரண்பட்டு நிற்கவும், எதிர்க்கட்சிகள் எதிர்த்து நின்று ஆட்சியைக் கவிழ்க்க முயற்சிக்கவும் என்று இழுபறிகள் தொடரும். இதனால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்ற பேச்சு மோசமாகவே இருக்கும். வெளிநாடுகள் இலங்கையில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஆளும் கட்சி ஏதோ உண்மையாக முயற்சிசெய்வதாக நினைத்து தொடர்ந்து உதவிகளை வழங்குவதுடன், விடுதலைப் புலிகளுக்கு எதிரான பயங்கரவாத, சிறுவர் கடத்தல் போன்ற பூச்சாண்டிப் பிரச்சாரங் களையும் நம்பி ஏமாறக்கூடும் என்றார் பரமசிவம்.

நீர் சொல்வது உண்மைதான். ஆனாலும், காலம் இப்போது ஒன்றாக மாறிவிட்டது. மத்திய கிழக்கில் அரபாத் ஏமாந்தது போன்ற நிலையில் நமது தலைமை இல்லை. பழைய சாத்வீகத் தலைமை இப்போதில்லை நெஞ்சில் உறுதியும் நேர்மையும் வீரமும் கொண்ட தலைமை நமக்கு வெற்றி தேடித்தரும் என்றேன்.

# வாசகர் நோக்கு

## தென்மராட்சி ஊடான பயணிகளின் அவலங்கள் தீர்க்கப்படுமா!

யாழ்ப்பாணத்துக்கும்- முகமாலைக்கும் இடையிலான பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்கள் பல பழு தடைந்த நிலையில் காணப்படுவதால் பயணிகள் பெரும் சிரமங் களை எதிர்நோக்க வேண்டி ஏற்படுகிறது.

இவ்வாறு பழுதடைந்த பஸ்களில் அன்றாட கருமங்களுக் குச் செல்லும் பயணிகள் படும் அவஸ்தைகளோ ஏராளம்.

சேவையில் ஈடுபடும் பஸ்கள் பழுதடைந்து இடைவெளியில் நின்றுவிடும். இதனால் அவற்றில் பயணம் செய்பவர்கள், அடுத்த பஸ்வரும்வரை தெருவோரங்களில் காத்து நிற்கவேண்டிய அவஸ்தை.

அதுமட்டுமல்லாது குறித்த பாதையூடாக சேவையில் ஈடு படும் 769 ஆம் இலக்க பஸ்கள் 15 நிமிடத்துக்கு ஒரு பஸ் என சேவையில் ஈடுபடுமென அறிவித்திருந்தும் அந்த நேர அள வையும் அந்த பஸ்கள் சேவையில் ஈடுபடுவதில்லை.

இந்த வீதியூடான போக்குவரத்து குறித்த நேர இடை வெளியில் ஒருநாளும் இடம்பெறுவதில்லை. இதைவிட வழமை யான நேரத்துக்கு பஸ் இல்லையாயின் அதற்குப் பதிலாக வேறு பஸ்ஸைக் கூட சேவையில் ஈடுபடுத்துவதில்லை. ஆனால், வேறுபகுதிகளுக்கு இவ்வாறல்லாமல் சேவை சீராக நடை பெறுகிறது. எனினும், தென்மராட்சி மக்களை மட்டும் போக்கு வரத்து சபையினர் ஏன் புறக்கணிக்கின்றனர்.

இடைவழியில் பஸ் பழுதடைந்து அடுத்த பஸ்ஸுக்காக காத்து நிற்கையில் அது ஏற்றிச் செல்லுமோ எனும் ஏக்கத் துடன் நிற்கவேண்டியுள்ளது. இவ்வாறான சம்பவங்கள் அண்மை நாட்களாக அதிகரித்து வருவதால் இவற்றில் பய ணிக்கும் அரச, அரச சார்பற்ற நிறுவன ஊழியர்கள், மாண வர்கள் குறித்த நேரத்துக்கு கடமைக்குச் செல்ல முடியாமல் உள்ளது.

இதுதவிர தற்போது கைதடி, நாவற்குழி பாலங்கள் புனர மைப்பு வேலைகள் நடைபெறுவதால் கோப்பாய் ஊடாக யாழ். நகருக்குச் செல்வதால் போக்குவரத்து கட்டணம் அதிகமாகச் செலுத்த வேண்டிய நிலை ஏற்படுகிறது. பாலங்கள் புனரமைப் பதற்காக பாதை மாற்றப்பட்டதற்கு பயணிகளிடமா அதிக கட்டணம் அறவிடுவது. அவ்வாறான, தரமான பஸ்களையாவது சேவையில் ஈடுபடுத்தலாம் தானே!


இது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினர் அக்கறை எடுத்து தென்மராட்சி மக்களின் சீரான போக்குவரத்துக்குரிய நடவடிக்கைகளை எடுப்பார்களா?

**எஸ். உமா - மிருசுவில்.**

வாழ்க்கை வரலாறு

சைவப்புலவர் செ.கந்தசத்தியதாசன்

# பவள விழாக் காணும் சைவப்புலவர் வ.கந்தசாமி



சைவபரிபாலன சபை என்றவுடன் பலருக்கும் தோன்றும் உருவம் சைவப்புலவர் வ.கந்தசாமி. சைவப்பெரியார் சிவபாத சுந்தரனாரைப் படத்தில் பார்த்தவர்கள் நேரடியாகப் பார்க்க வேண்டுமானால், சைவப்புலவரின் உருவத்தைக் காட்டலாம் எனக் கூறுமளவுக்கு பவளம்போல் மேனி, பால் வெண்ணீறு, வெண்ணிற வேட்டி, சேட், சால்வை என்பவற்றுடன் சைவப் பழமாகத் திகழ்பவர் சைவப்புலவர் கந்தசாமியே.

பொலிகண்டிக் கந்தவனக் கடவை முருகப்பெருமான் ஆலயச் சூழலில் வல்லிபுரம் வள்ளிப்பிள்ளை தம்பதிகளுக்கு 18.01. 1931 ஆம் ஆண்டில் அவதரித்தவரே கந்தசாமி, சைவப் பெரியாரின் அரவணைப்பில் வாழ்ந்தமையால் நல்ல சமயப் பண்பையும், பக்குவத்தையும் பெற்ற இவர் - பண்டிதர் சி.கந்தவனம் என்பவரால் ஏடு தொடக்கப்பட்டு, பொலிகண்டி உப்புக்கிணற்றடிப் பிள்ளையார் கோவிலடிப் பாடசாலையில் ஆரம்பக் கல்வியையும், கரணவாய் தாமோதர வித்தியாசாலையிலும், வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்திலும் கல்வி கற்றார்.

இவரை நல்ல விளைநிலமாக்கிய பெருமை ஆசான்களையே சாரும். சைவப்பெரியார் சிவபாத சுந்தரனார், வியாகரண சிரோன் மணி, கி.சீதாராம சாஸ்திரிகள், க.கி.நடராஜன், வித்துவான் சுப்பையாபிள்ளை, வித்துவான் கார்த்திகேசு, பண்டிதர் இளமுருகனார், வ.மு.இரத்தினேஸ்வர ஐயர், பிரமஸ்ரீ ஆத்மநாதசர்மா, வச்சிரவேல் முதலியார் போன்ற ஆசிரியர்களின் அறிவுப் பொக்கிசங்களைப் பெற்றமையாலேயே இன்றும் நிறைமொழி மாந்தராகத் திகழ்கின்றார்.

இவரின் திறமைகண்டு வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் எம்.ஏ.முத்துக்குமாரு முகாமையாளர் ஆசிரியராக்கினார்.

பின் நல்லூர் சைவாசிரியார் கலாசாலையில் பயிற்சிபெற்று, ஹொரவப்பொத்தானை மகா வித்தியாலயத்திலும், மிகிந்தலை வித்தியாலயத்திலும் 1974 ஆம் ஆண்டு தொடக்கம் 1991 ஆம் ஆண்டு வரை பெரியபுலம் மகா வித்தியாலயத்திலும் ஆசிரியராய், உப அதிபராய்க் கடமையாற்றினார்.

இல்லறமாம் நல்லறத்தில் கந்தர்மடம் துரையப்பா விஜயராணியை 1959 ஆம் ஆண்டு கைபிடித்து பாலேந்திரன், இராஜேந்திரன், சிவகிருபா, கிருபாகரி ஆகிய நான்கு பிள்ளைகளைப் பெற்று ஆளாக்கி, உயர் நிலைக்கும் உயர்த்தினார்.

பிறர் பிள்ளையைப் பாலூட்டி வளர்த்தால், தன் பிள்ளை தானே வளரும் என்பது போலவும் "தக்கார் தகவிலார் என்பது அவரவர் எச்சத்தாற் கொள்ளப்படும்" எனும் குறட் பாக்களுக்கேற்பவும் பிள்ளைகள் வெளிநாடுகளில் நன்னிலையில் வாழ்கின்றார்கள் என்றால், இறைவனின் ஆசீர்வாதமேயாகும்.

நாவலர் பாடசாலையில் கற்றமையும், நாவலரின் வாழ்வை சுவைத்துக் கற்றவையும் சைவத்தை நாம் காப்பாற்றாவிட்டால், யார் தான் காப்பாற்றப் போகின்றார்கள் என்ற சிந்தனையில் பல சமய நிறுவனங்களுடன் இணைந்து, சமயப் பணியாற்றினார்.

வண்ணை சாந்தையர்மடம், கற்பகவிநாயகர் கோயில், சைவ சமய அபிவிருத்திக்கழகம், சைவபரிபாலனசபை, அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம், அகில இலங்கை சைவ சித்தாந்த பண்டிதர் சங்கம், கந்த புராணசபை, வடமாநில சைவ இளைஞர் மன்றம், நாவலர் தர்மகர்த்தாசபை, நாவலர் வித்தியாலய பழைய மாணவர் சங்கம், நாச்சிமார் கோயில் சனசமூக நிலையம், வில்லூன்றி புனித தீர்த்தம், வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் போன்ற நிறுவனங்கள் இவரது சேவையை நன்கு பயன்படுத்திக் கொண்டன.

இவை மட்டுமன்றி, சிறைச்சாலையில் அறிந்தோ, அறியாமலோ குற்றம் செய்து சிறைவாசம் செய்பவர்களை நல்வழிப் படுத்தவேண்டும் என்ற உயர் சிந்தனையில், கோப்பாய் திறந்த வெளிச் சிறைச்சாலையிலும் ஞாயிறுதோறும் நல்ல போதனை செய்தார்.

வயது முதிர்ந்தவர்கள் நல்ல சிந்தனையோடு வாழவேண்டும். அடுத்தபிறப்பில் நல்லறிஞர்களாக வரவேண்டும் என்ற சிந்தனையில் - கைதடி வயோதிபர் இல்லத்திலும், வெள்ளிதோறும் சைவ நற்சிந்தனை வழங்கி வந்தார்.

சைவபரிபாலன சபையின் உயிர்நாடியாகத் தேர்வுச் செயலாளராக இருந்து ஆற்றிய பணிகளுக்கு அளவேயில்லை.

நாவலர் குருபூசையை முன்னிட்டு, ஆண்டுதோறும் பேச்சுப் போட்டி நடத்தலும், புண்ணிய நாச்சியம்மையாரது குருபூசையை முன்னிட்டு, ஆண்டுதோறும் பண்ணிசைப் போட்டியை நடாத்தியும், தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள் வழங்கி, இளந்தலை முறையினரையும் ஊக்கப்படுத்தி வருகிறார்.

இவருடைய சேவைகளை உணர்ந்து அவ்வப்போது பல நிறுவனங்கள் பட்டங்கள், பரிசுகள் வழங்கிக் கௌரவித்திருக்கின்றனர்.

1961 ஆம் ஆண்டில் சென்னை சைவசித்தாந்த சமாஜம் சைவப் புலவர் பட்டத்தையும்,

1966 ஆம் ஆண்டு நல்லை திரு ஞானசம்பந்தர் ஆதீனம் சித்தாந்த வித்தகர் பட்டத்தையும்,

1968 ஆம் ஆண்டு சைவ பாதுகாப்புச் சபை சிவனடியார் மணி என்றும்,

1971 ஆம் ஆண்டு மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீனம் சிவ நெறிச் செம்மல் என்றும்,

2000 ஆம் ஆண்டு ஆத்ம நாதசர்மா ஞாபகார்த்த சபை சிவ நெறிக் காவலன் என்றும்,

2002 ஆம் ஆண்டு சர்வதேச இந்துக்குருமார் குருபீடம் - சிவ நெறிக் கலாநிதி என்றும்,

இதே ஆண்டில் அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம சைவபூசணம் என்றும்,

கொடடிக் கிராம அபிவிருத்திச் சங்கம் சமூகதிலகம் என்றும், விருதுகள் வழங்கிக் கௌரவித்திருக்கின்றார்கள்.

பவளவிழாக் காணும் பெரியாரது நற்பணிகளை நாமும் ஏற்று, இயன்ற வகையிலாவது நற்பணியாற்ற எண்ணவேண்டாமா என்ற சிந்தனையே நமக்குத் தோன்ற வேண்டும் என, இந்த நாளில் சைவப்புலவரை நாமெல்லாம் மனதார வாழ்த்தி வணங்குவோம்.

இறையியல்

– மோ. தார்சீசியஸ் –

# பார்வை பெறுவோம்

**தவக்காலம் - நான்காம் வாரம்**

**'நான் உலகில் இருக்கும் வரை, நானே உலகின் ஒளி'**

*(யோவான் 9:5)*

"யானைக்குப் பலம் தும்பிக்கையில். மனிதனுக்குப் பலம் நம்பிக்கையில்". இது ஒரு அருமையான முதுமொழியாகும். ஆண்டவர் இயேசு இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் பல நோயாளர்களைக் குணப்படுத்தினார். அவரின் நலமளிக்கும் செயல்கள் பல வடிவங்களில் இருந்தன. சிலவேளைகளில் உடல் பிணிகளையும், வேறு சமயங்களில் மன நோய்களையும், இன்னும் சிலவேளைகளில் அலகையை விரட்டுவது, பாவத்திலிருந்து மன்னிப்பு அளித்து, மீட்பது போன்ற செயல்களாகவும் இருந்தன. நமது வாழ்விலும் சஞ்சலங்கள், உளைச்சல்கள் போன்றவை நீக்கப்பட வேண்டியிருக்கலாம். இத்தனைக்கும் நம்பிக்கைதான் மூலகாரணம்.

பிறவிக்குருடனும் தன் குருட்டுத் தன்மையை நீங்காதா? எப்போது நீங்கும்? எப்படி நீங்கும்? என்ற அங்கலாய்ப்புடன் வாழ்ந்தான், வாழ்கின்றான். அவனைக் கண்ட இயேசு இரக்கமேலீட்டால் அவனை நெருங்கின்றார். இயேசு அவனை நெருங்கியது ஒரு நோக்கம். ஆனால் அங்கு சூழ நின்றவர்களோ இயேசுவில் குற்றம் காணும் நோக்குடன், குறை காணும் நோக்குடன் 'ராபி இவன் பார்வையற்றவராய்ப் பிறந்தது இவன் செய்த பாவமா? அல்லது இவன் பெற்றோர் செய்த பாவமா? என்று அவரின் நோக்கத்தை திசைதிருப்ப முயலுகிறார்கள். ஆனால் இவர்களின் போலிக் காரணங்கள், குற்றச்சாட்டுக்களுக்கு இடம் கொடுக்கவில்லை. மாறாக சாட்டையடி கொடுத்து, அவர் தரையில் உமிழ்ந்து உமிழ்நீரால் சேறு உண்டாக்கி, அச்சேற்றை அவன் கண்களில் பூசி 'நீர் சீலோவாம் குளத்தில் போய்க்கழுவும்' என்றார்.


பிறவிக் குருடனோ, இயேசுவின் வார்த்தையை ஏற்றுக் கொண்டான், நம்பினான். பெரும் நம்பிக்கையோடு போய்க் கழுவினான். பார்வை பெற்றான். பிறவிக் குருடனின் விசுவாசம், நம்பிக்கை அவனைக் குணமாக்கியது. இருளிலிருந்து ஒளிக்கு வந்தான். பார்வை பெற்றான்.

இருளைப் பழித்து, ஒளியை வாழ்த்துகின்றோம் என்றும் ஒளியில் வாழவே விரும்புகிறோம். இருளை வெறுக்கிறோம். இருண்ட வாழ்க்கை போதும் போதும் என்கிறோம். காரணம் - இருளில் சுதந்திரமாக நடமாட முடியாது. ஆனால் ஒளியிலே பலவற்றைக் காணவும், பகுத்துப்பிரித்து வகுத்துச் செயற்படவும் முடிகிறது.

கிறீஸ்து எமக்காகத் தம்மை நறுமணம் வீசும் பலியும், காணிக்கையுமாக ஒப்படைத்து அன்பு கூர்ந்தார். எனவே, இருளில் வாழ்வோர் செய்கின்ற ஒழுக்கக் கேடான செயல்களையும் நீக்கி, ஒளியின் மக்களாக, கடவுளின் அன்புப் பிள்ளைகளாக நாம் ஒருவரை ஒருவர் மன்னித்து வாழ அழைக்கின்றார்.

கிறீஸ்துவை அறியாத நிலையிலே ஒரு காலத்தில் நாம் கருத்துக் குருடர்களாக இருந்தோம். ஆனால் இப்போது நாம் திருமுழுக்கின் மூலம் ஞானஒளி பெற்றுத் திகழ்கிறோம்.

இந்த ஞான ஒளியை நாம் என்றும் அணையவிடாது காத்து நிற்க வேண்டும். சாத்தான் இந்த ஒளியை அணைக்கப்பல எத்தனங்களை, பிரயத்தனங்களைச் செய்கிறான். ஆனால் நாம் இதற்கு இடம் கொடுக்கக்கூடாது.



இத்தவக் காலத்தின் மையப் பகுதியில் பிரவேசிக்கும் நாம் நமது ஆண்டவரோடு ஒளியாய் இருக்கிறோமா? எனக்கு ஒரு குடும்பம் உண்டு, ஒரு தொழில் உண்டு, அப்படி இருக்கும் போது, நான் எப்படி இயேசுவின் ஒளியை உலகுக்கு உயர்த்திக்காட்ட முடியும்? என்று சாக்குப் போக்குச் சொல்கிறோமா?

எம்மிடையே உள்ள இருளை, குருட்டாட்டத்தைப் போக்குவோம். நாம் இருளில் அல்ல, பிரகாசத்தின் ஒளியின் மக்கள் என்பதை உணருவோம்.

சக்கேயு நீண்டகாலமாக இருளில் வாழ்ந்தான். அதுதான் அவனுக்கு இன்பமாய் இருந்தது. அந்த இருளை அகற்ற விரும்பவில்லை. ஆனால் ஒருநாள், ஒரு நேரம், ஒரு மரத்தின் உச்சியில் ஏறி இருந்தபோது, இயேசுவின் வாக்கு அவனுக்கு எட்டியது. 'சக்கேயுவே, இறங்கி வா' என்றார். அந்த நேரமே அவன் உள்ளத்தில் குடியிருந்த இருள் நீங்கிற்று. மரத்திலிருந்து இறங்கினான். மனத்திலிருந்து இறங்கினான். ஒளி உட்புகுந்தது. பார்வை பெற்றான். இது வரை காலமும் வாழ்ந்து வந்த வாழ்க்கையை உதறித் தள்ளினான். பார்வை பெற்றான். பாதை கண்டான். வாழ்வு பெற்றான்.

இதேபோன்று இயேசு இறந்து விட்டாரா? என்பதை உறுதிப் படுத்த குருட்டுப் போர்வீரன் - அவர் இதயத்தை ஈட்டியால் குத்தினான்.

இரத்தமும், தண்ணீரும் பீறிட்டது. அவன் கண்ணில் பட்டது. அவனும் உடல் நிலைப்பார்வை பெற்றான். வாழ்வுப்பார்வை பெற்றான். உண்மைநிலை உணர்ந்தான். உள்ளம் வெதும்பினான். புது மனிதனாக மாறினான்.

நாமும் இந்தத் தவக்காலத்தின் மையப்பகுதியில் இன்று பிரவேசித்துள்ள நாம், எமது வாழ்க்கையின் குருட்டாட்டத்தைத் தெளிவுபடுத்தி பார்வை பெறுவோம். புது வாழ்வு பெறுவோம்.

## தவக்கால நற்சிந்தனை

மோ. தார்சீசியஸ்

**"நீர் சீலோவாம் குளத்துக்குப் போய் கண்களைக் கழுவும்"** *(யோவா.9:7)*



**இறைவனின் வார்த்தை ஆற்றல் மிக்கது. உயிருள்ளது. வார்த்தையால் உலகை உண்டாக்கிய இறைவன் வாக்கு மாறாதவர். வார்த்தையில் உண்மையுள்ளவர். எனவே அவரது வார்த்தையின் வழியே வாழ நம் ஒவ்வொருவரையும் அழைக்கிறார். கண் பார்வையற்ற ஒருவன் இருண்ட வாழ்க்கை வாழ்ந்தான். உலகமே இருண்டுவிட்டது. வாழ்க்கையும் அப்படியே. அத்தகைய அவன், பார்வை பெறவிரும்பினான். புது வாழ்வு பெற்று வாழவிரும்பினான். யேசுவின் வார்த்தையில் நம்பிக்கை கொண்டான். இவரால் தனக்குப் புது வாழ்வு கிட்டும் என்ற நம்பிக்கையுடன் அவர் கூறியபடியே சீலோவாம் குளம் நோக்கிச் சென்றான். கழுவினான், பார்வை பெற்றான், விடிவைக் கண்டான். தனது முன்னைய வாழ்க்கைக்கும் முடிவைக் கண்டான். புதிய மனிதனாய் மீண்டான். நாமும் எமது இருண்ட வாழ்விலிருந்து புதிய ஒளி பெறுவோம்.**

# இராணுவ அடாவடித்தனங்களை கண்டித்து குடா நாட்டு பொதுஅமைப்புக்கள் அறிக்கை!

**(யாழ்ப்பாணம்)**

**வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவி இராணுவத்தினரின் உழவுஇயந்திரம் மோதி உயிரிழந்த சம்பவத்தை அடுத்து, இராணுவத்தினரும் பொலிஸாரும் நடந்துகொண்ட விதம் - சமாதான முயற்சியை பாதிக்கும் செயலாகும்.**

**இராணுவத்தினர் பொதுமக்கள் மீது அடாவடித்தனங்களை மேற்கொண்டால் பாரிய விளைவுகளை எதிர்நோக்க வேண்டிவரும் என பல்வேறு பொது அமைப்புக்களும் வெளியிட்டிருக்கும் கண்டன அறிக்கைகளில் தெரிவித்துள்ளன.**

**இது குறித்து யாழ்.குடாநாட்டின் கல்விச் சமூகம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொதுஅமைப்புக்கள் என்பன வெளியிட்டுள்ள கண்டன அறிக்கைகளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -**

### நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன்

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் தலைமைக் காரியாலயத்தினுள் அத்துமீறிப் புகுந்த பொலிஸாரும் இராணுவத்தினரும் பேரவை அலுவலகம் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதுடன் அலுவலகத்தினை அடித்து நொறுக்கியுள்ளனர். இந்த அலுவலகத்தின் ஒரு பகுதியில் இருந்து எனது அலுவலகமும் இயங்கிவருகின்றது. எனது அலுவலகம் இயங்குவது நன்றாக தெரிந்திருந்தும்கூட என்னைக் கொலை செய்யும் நோக்கிலும், மாணவர் பேரவையினரைக் கொலைசெய்யும் நோக்கிலும் திட்டமிட்ட ரீதியிலேயே இத் தாக்குதலை இராணுவத்தினரும் பொலிஸாரும் மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலைக்கு முன் பாகவுள்ள கிறிஸ்தவ நிறுவனம் ஒன்றிற்கு சொந்தமான மாணவர் விடுதி ஒன்றினுள் புகுந்த இராணுவத்தினரும் பொலிஸாரும் விடுதிக் காப்பாளர் உட்பட அனைத்து மாணவர்களையும் துப்பாக்கிப் பிடிகளாலும் குண்டாந் தடிகளாலும் தாக்கினர். தான் விடுதிக்காப்பாளர் என அறிமுகப் படுத்தியும்கூட அவரை பொலிஸார் ஒருவர் தனது இடுப்பில் இருந்த கைத்துப்பாக்கியை எடுத்து தாக்கியுள்ளார். பின்னர் அப்பாவிகளான அவர்கள் அனைவரையும் பொலிஸ் நிலையத்திற்கு இழுத்துச் சென்று பொய்யான குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளனர். இதேவேளை விடுதியில் பூட்டப்பட்ட நிலையில் இருந்த இருபதுக்கும் மேற்பட்ட சைக்கிள் களை துப்பாக்கி களால் அடித்து சேதப்படுத்தியபின் பூட்டுக்களை உடைத்து அனைத்துச் சைக்கிள்களையும் தூக்கிச் சென்றுள்ளனர்.

படையினரதும் பொலிஸாரினதும் இச் செயற்பாடுகளைத் நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இச் சம்பவத்தின் போது ஆர்ப்பாட்டக்காரர்களை கலைப்பதற்காக ஆயுதப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகள் மக்களைக் கொல்லவேண்டும் அவர்களை அங்கவீனர்களாக்க வேண்டும் என்கின்ற நோக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ளதை நன்கு உணரமுடிகின்றது.

கொட்டன்களாலும், துப்பாக்கிகளாலும் மக்களின் கழுத்து, தலை, வயிறு, ஆகிய பகுதிகளிலும் மிருகத்தனமாக அதிகளவில் தாக்கியுள்ளனர். இவ்வாறு ஊடகவியலாளர் ஒருவர் கொட்டன் ஒன்றினால் மோசமாகத் தாக்கப்பட்டுள்ளார். அதுமட்டுமல்லாமல் பிளாஸ்ரிக் ரவைகளை பயன்படுத்துவதற்குப் பதிலாக உண்மையான ரவைகள் பயன்படுத்தப்பட்டது மட்டுமல்லாமல் மக்களை நோக்கியே சுட்டனர். இதன் காரணமாக பல்கலைக்கழக மாணவர்களை கொல்லும் நோக்கில் மாணவர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் வயோதிபர் ஒருவர் கொல்லப்பட்டார். யாழ்.நகரப் பகுதியில் படையினரின் துப்பாக்கிச் சூட்டினால் இருவர் படுகாயமடைந்தனர்.

இவ்வாறு மக்களுக்கும் ஆக்கிரமிப்புப் படைகளுக்குமிடையில் முரண்பாடுகள் ஏற்படுவதற்கு முக்கிய காரணம் அடிக்கடி படையினரின் வாகனங்களால் பொதுமக்களும் மாணவர்களும் மோதிக் கொல்லப்படுவதாகும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் மக்கள் கொதிப்படைந்து இராணுவத்தினருக்கு எதிராகச் செயற்படும்போது அவர்களை சுட்டுக்கொலைசெய்து அடக்கிவிடலாமென படைத்தரப்பு பகற்கனவு காண்கின்றது. ஆனால், அந்த அணுகுமுறையினால் மக்கள் தொடர்ந்து கொல்லப்படுவார்களானால் மீண்டும் ஒரு போர் வெடிப்பதனை யாரும் தடுக்க முடியாமல் போகும் என்பதுடன், மக்கள் படைகளை குடாநாட்டிலிருந்து அடித்து விரட்டுகின்ற நிலைதான் மேலும் தீவிரமடையும். எனவே முரண்பாடுகளை தவிர்ப்பதற்கான ஒரேவழி மக்கள் நெருக்கமாகவுள்ள குடியிருப்பு பிரதேசங்களில் இருந்து படையினை வெளியேற்றுவதும் இராணுவ வாகனங்களின் அதிகரித்த நடமாட்டத்தினை முற்றாகத் தடை செய்வதுமேயாகும். எனவே வரப்போகும் நிலமைகளை உணர்ந்து மக்களின் விருப்பங்களுக்கு மாறாக தொடர்ந்தும் மக்கள் குடியிருப்புக்களுக்கு மத்தியில் படையினர் தங்கியிருக்காது உடனடியாக அப்பகுதிகளை விட்டு வெளியேறவேண்டும் இல்லையேல் விளைவுகள் விபரீதமாகவே அமையும் என எச்சரிக்கின்றோம்.

### நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன்

யாழ்.மாவட்டத்தில் இராணுவத்தினரின் கனரக வாகனங்களால் ஏற்படும் விபத்துக்களும், அதனால் ஏற்படும் உயிரிழப்புக்களும் நாளாந்தம் அதிகரித்து வருகின்றன.

இராணுவ வாகனங்கள் பொது மக்களை மோதுவதும், மக்கள் இராணுவத்துக்கெதிராக கிளர்ந்தெழுவதும், அண்மைக்காலத்தில் அதிகரித்து வருவதை இராணுவம் உணர்ந்திருந்தால், தனது தவறுகளை அது திருத்தியிருக்கும். மரணித்துப் போபவர்கள் தமிழர் தானே என்ற சிந்தனையில் இராணுவம் இருப்பதால்தான் இவ்வாறான சம்பவங்கள் தொடர்கதையாக இருப்பதாக ஐயுறவேண்டியுள்ளது.

சிறிய ஒரு பிரதேசத்தில் 35,000 இராணுவத்தை வைத்து ஆக்கிரமித்துள்ள அரசாங்கம், அவர்களது தேவைகளுக்காக நூற்றுக்கணக்கான கனரக வாகனங்களையும் கொடுத்துள்ளது. இராணுவம் பொது மக்களால் அந்நியப்படையாகவும், மக்கள் விரோதப்படையாகவுமே பார்க்கப்படும். இந்நிலையில் விபத்துக்களால் மக்கள் மரணிக்கும் போது பொங்கி எழுவார்கள் என்பது சகஜமானதே. இதற்காக அப்பாவிப் பொதுமக்களைச் சுட்டுத் தள்ளுவதும், அவர்களைக் கண்மூடித்தனமாகத் தாக்குவதும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது மாத்திரமல்ல கண்டிக்கப்பட வேண்டியது மாகும்.

நேற்றுமுன்தினம் யாழ்.நகரில் வேம்படிமகளிர் உயர்தரப்பாடசாலை மாணவியின் மரணமும் அதன் பின்னர் ஏற்பட்ட சம்பவங்களும் இராணுவத்தின் அடாவடித்தனங்களையும், தமிழர் விரோத நிலைப்பாட்டையுமே வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது. இராணுவத்தின் இச்செயற்பாடானது முழு மக்களையும் வீதியில் இறங்கிப்போராட வைக்கும் செயற்பாடாகும். அது மாத்திரமல்லாமல் கடந்த மூன்று வருட சமாதானச் செயற்பாடுகளையும், யுத்த நிறுத்தத்தையும் சீர்குலைத்து மீண்டும் யுத்தத்திற்குள் செல்லும் முயற்சியுமாகும். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் தமிழ் மக்களும் இராணுவத்தின் இம்மோசமான நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டிக்கிறார்கள்.

இராணுவம் இனியாவது தன்னைத் திருத்திக்கொள்ள முயற்சிக்கிட்டும், இல்லையேல் இராணுவத்திற்கெதிரான தொடர் போராட்டங்கள் தவிர்க்க முடியாமற்போய் விடும்.

### பல்கலை மாணவர் ஒன்றியம்

பாடசாலை மாணவி மீதான இராணுவ உழவு இயந்திரத்தினால் மேற்கொள்ளப்பட்ட வீதி விபத்தினைத் தொடர்ந்து நடந்த சம்பவங்கள் எமது மக்களையும் எம்மையும் விசனம் அடைய வைத்துள்ளது.

வீதி விபத்துச் சம்பவத்தினைப் பொறுத்தவரை குறிப்பிட்ட மாணவி மீது எந்தத் தவறும் இல்லை என்பது சம்பவ இடத்தினை நேரில் சென்று பார்த்தால் உண்மை புலனாகும்.

வீதிச் சட்டங்களை மீறி இராணுவத்தினரும், பொலிஸாரும் நடந்து கொண்ட விதமே மாணவர்களையும், மக்களையும் வெகுண்டெழச் செய்துள்ளது. சாதாரணமாக விபத்து நடைபெற்றிருப்பின் குறிப்பிட்ட தரப்பினர் பொலிஸாரின் அனுமதியின்றி இடம் நகர்த்தக் கூடாது. ஆனால், தம்முடைய தவறு வெளிப்பட்டுவிடும் என்ற பயத்தினால் தமது தவறினை மூடி மறைக்க படையினரும் பொலிஸாரும் முனைப்புடன் செயற்பட்டுள்ளனர். தடயங்களை அழித்தது மட்டுமன்றி மோதிய வாகனத்தையும் இராணுவ முகாமினுள் கொண்டுசென்றுள்ளனர்.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகம் மீதும் பரமேஸ்வராச் சந்தியில் இயங்கிய நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனின் அலுவலகம் மீதும், பேரவை உறுப்பினர்கள் மீதும் தனது சிங்களக் காடைத் தனத்தினை இராணுவமும் காவல்துறையும் வெளிப்படுத்தியுள்ளது.

இன்று எமது பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் பொதுமக்களென அனைவரும் இராணுவத்தின் அராஜகச் செயற்பாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகும். அத்துடன் அப்பாவி வயோதிபர் ஒருவர் இறந்துபோனமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறான தொடர்ச்சியான நிகழ்வுகள் இனியும் நடைபெறுமாக இருந்தால் இதனால் ஏற்படப் போகின்ற விளைவுகள் மோசமாக அமையும். மாணவர் சமூகமே ஒன்று திரண்டு மிகப்பெரும் எதிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய நிலைக்குள் தள்ளப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

### கல்வி மேம்பாட்டுப் பேரவை

படையினரின் வாகனத்தால் மாணவி பலியாக்கப்பட்டதும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நிறுத்தி நீதியை பாதுகாக்க வேண்டிய இலங்கைக் காவல்துறையும், படைகளும் இச் சம்பவத்தை நேரில் கண்டிருந்தும் காணாததுபோல நடந்துகெண்டமையும் இப்படு கொலையை மூடிமறைக்க – தடயங்களை அகற்ற முற்பட்டமையும் அட்டூழியத்தை நேரடியாகக் கண்டு கொண்டிருந்த பொதுமக்களும் மாணவர்களும் அநீதிக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து நீதிவேண்டி ஆர்ப்பாட்டங்கள் மூலம் தம் முணர்வை ளிப்படுத்த முயன்ற வேளை, வன்முறையும் பயங்கரவாதமும் கட்டவிழ்த்துவிடப்பட்டமையும், அப்பாவி வயோதிபர் ஒருவர் படையினரின் கண்மூடித்தனதமான வேட்டுக்களால் பலியானமையும் இருவர் படுகாயமுற்றமையும் அமைந்துள்ளன.

இந்தப் பயங்கரவாத வன்முறை இதற்கு மேலும் பல படி முன்னேறி திருநெல்வேலியிலுள்ள மாணவர் பேரவைச் செயலகக் கட்டடத்துள் நுழைந்து சுனாமி அரக்கனால் பாதிக்கப்பட்டு நிவாரணம்பெற வந்திருந்த மாணவர்களையும் வாகனங்களையும் தாக்கிச் சேதப்படுத்தியதுடன் முற்றுமுழுதாக மாணவர் நலன்கருதிய இச்செயலகக் கட்டடங்களையும் அடித்துநொருக்கி சேதப்படுத்தியதையும் கல்விச் சமூகத்தால் மௌனித்து பார்த்துக் கொண் டிருக்க முடியவில்லை.

இச் செயற்பாடுகள் அனைத்தையும் கல்விச் சமூகத்தின் சார்பில் யாழ்.மாவட்ட கல்வி மேம்பாட்டுப்பேரவை மிக வன்மையாகக் கண்டிக்கிறது.

இந் நாட்டில் நிரந்தர சமாதானத்தை உருவாக்க ஏற்படுத்தப்பட்ட போர்நிறுத்தம், புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மீறிய இச் சம்பவங்களால் தமிழ் பேசும் மாணவர்கள் மட்டுமல்லாமல் தேசத்தின் அனைத்து மாணவர்களதும் கல்விச் செயற்பாடுகள் கேள்விக் குறியாகியுள்ளன. இத்தகைய கல்வி பெறும் மாணவர்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் செயற்பாடுகள் மேலும் தொடர்ந்து இடம்பெறாமல் பாதுகாத்துக்கொள்வது அனைவரதும் பொறுப்பாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தமிழ் மாணவர் ஒன்றியம்

இராணுவ உழவு இயந்திரத்தால் மோதப்பட்டு படுகொலை செய்யப்பட்ட வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவியின் கொலையை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இராணுவத்தை மாணவர்கள் மீதான அடாவடித்தனங்களின் ஒரு வடிவமாகவே கருதுகிறோம். இதனைத் தொடர்ந்து மரண விசாரணை நடைபெறுவதற்கு முன்பதாகவே இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து தடயங்களை மறைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிந்தமையானது, இராணுவத்தின் சட்டவிரோதமான போக்கினையே வெளிப்படுத்துவதாக அமைகின்றது.

இச் சம்பவத்தைத் தொடர்ந்து பாடசாலை வளாகங்களினுள் கண்ணீர் புகைக்குண்டுகளை வீசி மாணவர்களைப் பாடசாலையைவிட்டு வெளியேற விடாது தடுத்ததுடன் வெளியேறிய மாணவர்களை ஆயுதங்கள் கொண்டு கடுமையாகத் தாக்கியமையானது மிகவும் பாரதூரமான நடவடிக்கையாகவே நாம் கருதுகின்றோம்.

இதேவேளை போக்குவரத்து ஒழுங்குகள் சீரற்றிருந்தமையினால் பாடசாலைமுடிவடைந்தவுடன் மாணவர்களை பெற்றோர் மற்றும் உறவினர் வாயிலாக வீடுகளுக்கு அனுப்பும் பணியில் துரிதமாக ஈடுபட்டிருந்த மாணவர் ஒன்றியப் பிரதிநிதி களும் இராணுவத்தினரால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறான சம்பவங்கள் இனி வரும் காலங்களில் தொடர்ந்து நடைபெறுமாயின் தமிழ் மாணவர்களாகிய நாங்கள் சிங்களப் பேரினவாதத்திற்கெதிராகப் போராட வேண்டிய சூழ்நிலைக்கு வலிந்து தள்ளப்படுவோம் என்பதனை தெரிவித்துக்கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தமிழீழ மாணவர் அமைப்பு

ஸ்ரீலங்கா இராணுவம் மீண்டும் திட்டமிட்ட முறையில் தமிழ் மக்களை தாக்கியழிக்கும் கொடூரமான நடவடிக்கையினைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது.

பாடசாலை மாணவியினை இராணுவ வாகனத்தால் மோதி கொலை செய்ததன் பின்னர் அதனை மூடி மறைக்க முற்பட்டபோது அதனைத் தட்டிக்கேட்க முற்பட்ட மக்களையும், மாணவர்களையும் மூர்க்கத்தனமாகத் தாக்கியதுடன் எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டபோது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் ஒருவர் இறந்ததுடன் பலர் காயமடைந்தும் உள்ளனர். இவ்வாறாகப் பாடசாலை மாணவியைக் கொலைசெய்த இராணுவத்தினரையும் அத்துடன் பொதுமகன் ஒருவரை துப்பாக்கிப்பிரயோகம் செய்து கொலை செய்த பொலிஸாரையும் சட்டத்தின்முன் நிறுத்தி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கோருவதோடு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை, நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனின் அலுவலகம் என்பன தாக்கப்பட்டமையையும் வன்மையாகக் கண்டிக்கிறோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### யாழ்.மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம்

யாழ்ப்பாணம் வேம்படிமகளிர் உயர்தரப் பாடசாலை மாணவி இராணுவ வாகனத்தினால் படுமோசமான நிலையில் தாக்கப்பட்டு மரணமான செய்தியையும் இராணுவத்தின் மிலேச்சத்தனமான நடவடிக்கையையும் நாம் மிகவும் வன்மையாக கண்டிப்பதுடன் இவை யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கு அச்சுறுத்தலாகவும், ஆபத்தாகவும் மாறிவிடும் என அஞ்சுகிறோம்.

மாணவியின் மரணஅறிவிப்பின் உணர்வுகளினால் முழு யாழ். நகரமும் பெரும் சோகமே உருவெடுத்தாற்போல் காட்சியளித்த வேளையில் இந்த உணர்வின் உந்துதலினால் தமது ஆட்சேபனையை ஜனநாயகரீதியில் வெளிக்காட்ட முற்பட்ட பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பொது மக்கள் மீதும் இராணுவம் தமது மிலேச்சத்தனமான – ஆயுதமுனையிலான தாக்குதல்களை மேற்கொண்டு யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் நின்ற ஒரு அப்பாவி பொதுமகனை துப்பாக்கி முனையால் படுகொலைசெய்ததும், பலரைக் காயப்படுத்தியதும், சர்வதேச தமிழீழ மாணவ பேரவையின் அலுவலகத்தையும் அதன் சொத்துக்களையும் சேதப்படுத்தியதும் ஒரு யுத்தத்திற்கான நேரடி அழைப்பாகவும் அமைதிச்சூழலை திட்டமிட்டு குழப்புகின்ற செயற்பாடாகவுமே நாம் கருதுகின்றோம். இப்படிப்பட்ட கொடூரமான நிகழ்வுகள் தொடருமானால் அத்து மீறும் மக்களின் உணர்வுகளை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது.

இப்படியான சம்பவங்கள் எதிர்காலத்தில் தவிர்க்கப்பட வேண்டுமானால் மக்கள் நடமாட்டமும் போக்குவரத்துக்களும் அதிகமாகவுள்ள நகரப்பகுதிகள் முற்றுமுழுதாக இராணுவமயமற்ற பிரதேசமாக மாறவேண்டும் அல்லது மாற்ற வைக்கப்படவேண்டும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

## கல்வியியற் கல்லூரிக்கு அனுமதி பெற்றோர் விபரம்

நேற்றைய தொடர்ச்சி...

**ஆரம்பக் கல்வி**

நடஜாரா நிசாந்தினி (மட்டுவில்), தனலட்சுமி பாலசுப்பிரமணியம் (பொலிகண்டி), கோமளா ஐயாத்துரை (கைதடி), தெய்வேந்திரம் மீரா (கோண்டாவில்), வின்சனா சிலுவைராஜா (வட்டுக்கோட்டை), செல்லத்துரை காஞ்சனா (அனலைதீவு), அகிலா சரவணமுத்து (திருநெல்வேலி), றொகிதா நகுலேஸ்வரன் (கைதடி), நடராஜா ஜெயரூபன் (கரவெட்டி), லிங்கரத்தினம் கஜலஷ்மி (யாழ்ப்பாணம்), தர்சினி காராளசிங்கம் (வண்ணார் பண்ணை), தனப்பிரியா சிவபாதம் (கந்தர்மடம்), ராஜகுரு சுசிகலா (பொலிகண்டி), மேனகா ராஜதுரை (திருநெல்வேலி), கந்தசாமி மாலினி (புன்னாலைக்கட்டுவன்), சிவநந்தினி சிவராசா (ஏழாலை), வாமதேவன் கிருபாநந்தி (திருநெல் வேலி), சத்தியகலா சோமசுந்தரம் (ஊர்காவற்துறை), சிவசக்தி சிவநேசன் (ஏழாலை), பெர்னாண்டோ அனுஷ்ரி (குருநகர்)

**நடனம்**

ஞானமணி விஜயபவானி (கொழும்பு - 5), ஞானமணி விஜயபாமா (கொழும்பு - 5), மகேஸ்வரன் தாட்சாயினி (சுன்னாகம்), அகஸ்ரின் றொறினா (மட்டக்களப்பு), சிறி காந்தன் கார்த்திகா (மீசாலை), கந்தசாமி புஷ்பிகா (உக்கிலாங்குளம்), சந்திரகுலசிங்கம் தனுஷா (முள்ளியவளை), நல்லைநாதன் கம்சா (வட்டுக்கோட்டை), செல்வராஜா ரதீப்தா (இணுவில்), மதியாபரணம் நர்மதா (நீர்வேலி), செல்வரத்தினம் விஜிதா (முள்ளியவளை), ராஜபகதூர் டொறின் சிவதர்சினி (உடுவில்), கணேசமூர்த்தி புஸ்பலதா (திருக்கோவில்), செல்வராசா சுதாயினி (திருக்கோவில்), மிருனாளினி மகேந்திரம் (பருத்தித்துறை), சிவரூபா பரமகுரு (ஏழாலை), சிவப்பிரகாசம் தர்சினி (புலோலி), கார்மேகம் லோகசாந்தினி (லிங்க நகர்), சிவகுரு சரளா (முள்ளியவளை), ஆர். லூர்த்தாஸ் செல்வராணி (புதுக்குடி யிருப்பு)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## உள்முரண்பாடு உச்சக்கட்டத்தில்...

அத்துடன், இலங்கை உப்பு உற்பத்தி நிறுவனத்தின் நிதியினை டக்ளஸ் தேவானந்தாவிற்குத் தெரியாமல் சுருட்டியுள்ளதாக அமைப்பின் இரண்டாவது அமைப்பாளர் கரிசந்திரா மீது ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளின்படி இந்தத் தகவலை டக்ளஸ் தேவானந்தா தனது கணக்காய்வு நிறுவனத்திடமிருந்து பெற்றுள்ளதாகவும் இதனால் ஈ.பி.டி.பி அமைப்பின் இரண்டாவது பிரதம அமைப்பாளர் கரிசந்திரா எந்த நேரமும் கட்சியை விட்டு வெளியேற்றப்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே ஈ.பி.டி.பி அமைப்பின் அம்பாறைமாவட்ட அமைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான குணசேகரம் சங்கர் அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார். குணசேகரம் சங்கர் பல பெண்களுடன் பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டமை, சுனாமி நிவாரணத்துக்கு என்று கட்சியினால் கொடுத்த பணத்தை மோசடி செய்தமை, கட்சியின் தலைவர் தேவானந்தாவிற்கு எதிராகச் செயற்பட்டமை போன்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளதாக சென்றமாத இறுதிப் பகுதியில் அம்பாறை மாவட்ட செயற்பாட்டாளர் கூட்டத்தில் டக்ளஸ் தேவானந்தாவின் செயலாளர் கிருபனால் அறிவிக்கப்பட்டுள்ளது.

## இராணுவத்தனர்...

கிலோ மீற்றர் முன்னுக்குவந்தே இந்தத் தாதக்குதலை நடத்தியுள்ளனர்.

அத்துடன், இந்தத் தாக்குதலை நடத்தியவர்கள் குறித்த படைமுகாமுக்குச் சென்றதையும் பொதுமக்கள் சிலர் கண்டுள்ளனர்.

இந்தத் தாக்குதல் நடைபெற்ற பகுதியிலிருந்து இராணுவத்தினரின் ஹெல்மட் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு விடுதலைப் புலிகள் முறையிட்டதைத் தொடர்ந்து அவர்கள் சம் பவ இடத்தை சென்று பார்வையிட்டுள்ளனர்.

### புல்மோட்டையில் இராணுவத்தினர்

# முஸ்லிம்களின் சடலங்களை தோண்டியதால் பதற்றம்!

திருகோணமலை – புல்மோட்டையில் முஸ்லிம்கள் நேற்றுக் காலை 11.00 மணிக்கு இராணுவத்தினருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

புல்மோட்டை இராணுவ முகாமுக்கு அருகில் உள்ள மையவாடியில் புதைக்கப்பட்ட சடலங்களை இராணுவத்தினர் தோண்டி எடுத்தமையைக் கண்டித்து இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் மக்கள் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை இந்தப் பகுதியில் விளையாடச் சென்ற சிறுவர்கள் மையவாடியில் சடலங்கள் தோண்டப்பட்டிருப்பதைக் கண்டு பெரியவர்களிடம் தெரிவித்தனர்.

அவர்கள் அங்கே சென்றபோது அங்கிருந்த இராணுவத்தினர் முகாம் நோக்கி தப்பி ஓடிவிட்டனர்.

இதனால் ஆத்திரமுற்ற பள்ளிவாசல் நிர்வாகத்தினர் இராணுவ முகாமை நோக்கி சென்றபோது காவலரணில் அவர்கள் தடுக்கப்பட்டனர். இது குறித்து மக்கள் சார்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இராணுவ முகாமை விரிவாக்கும் நோக்கில் மையவாடிப் பகுதியில் நிலத்தை சமப்படுத்தும்போது சடலங்கள் வெளிப்பட்டன என அங்கிருந்த இராணுவத்தினர் மக்களிடம் தெரிவித்தனர். மக்கள் இதனை நிராகரித்தனர். இராணுவத்தின் அடாவடிச் செயலைக் கண்டித்து ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

இதனால் கடைகள் அனைத்தும் பூட்டப்பட்டன. வீதிகளுக்குக் குறுக்காக ரயர்கள் போட்டும் எரிக்கப்பட்டன. இதன் காரணமாக புல்மோட்டைக்கும் இதர இடங்களுக்குமிடையிலான போக்குவரத்துக்கள் முற்றாக சீர்குலைந்தன.

புல்மோட்டை முஸ்லிம் மையவாடியில் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என மூவாயிரத்துக்கும் அதிகமானவர்கள் ஒன்று கூடி இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் தலையிட்டு மக்களை ஆத்திரம் கொள்ளவேண்டாம் எனவும் புல்மோட்டை விடயமாக தாங்கள் பேசி ஒரு முடிவுக்கு வருவோம் எனவும் தெரிவித் தார்.

இது தொடர்பாக புல்மோட்டைப் பொலிஸாருடனும் கிழக்கு பிராந்திய பொலிஸ் மா அதிபர் நெவில் விஜய சிங்காவுடனும் அவர் தொடர்பை ஏற்படுத்தி நிலைமையை பாதுகாக்குமாறு தெரிவித்தார்.

புல்மோட்டையில் ஏற்பட்ட இந்த அநாகரீக செயலுக்கு ஆட்சேபம் தெரிவித்து கிண்ணியா, மூதூர், தோப்பூர், குச்சவெளி, இறக்கண்டி, நிலாவெளி பகுதி முஸ்லிம்களும் மாவட்டம் தழுவிய அளவிலான ஆர்ப்பாட்டத்தை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

## வெளிவிவகார....

நாளை மறுதினம் கொழும்பு வரும் இவர் கிளிநொச்சி செல்வதற்கான அனுமதி வழங்கப்பட்டால் ஐரோப்பிய ஒன்றிய ஆணையாளர் கிறிஸ்பற்றேன் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்த பின்னர் – ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர் அதிகாரி ஒருவர் விடுதலைப்புலிகளைச் சந்திப்பது இதுவே முதன் முறையாக இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், இவர் கிளிநொச்சி செல்வதற்கான அனுமதியை அரசாங்கம் வழங்கியுள்ளதா என்பது குறித்து தகவல்கள் வெளிவரவில்லை.

## ஆயுதக்....

வார்.

துப்பாக்கிச் சூட்டில் படுகாயமுற்ற இவரை உடனடியாக விமானப் படையினர் கொழும்பிற்குக் கொண்டு செல்லும்போது மரணமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

## படையினர் – பொலிஸார் – புலிகள்...

னார்.

இந்தச் சந்திப்பில் தமிழீழ விடுதலைப்புலிகள் தரப்பில் யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பதிரி, யாழ்.மாவட்ட அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் கண்ணன் ஆகியோரும், படைத்தரப்பில் மாவட்ட படைத்தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன், யாழ்.மாவுட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தல்பதாது ஆகியோரும் பங்கேற்றனர்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் நடந்த இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட யாழ். மாவட்ட அரசியற்துறைப்பொறுப்பாளர் இளம்பரிதி, இது தொடர்பாகத் தெரிவிக்கையில் –

படையினரின் வாகனத்தால் மோதப்பட்டு பலியான மாணவி மீதான விபத்துச் சம்பவத்தையும், அதனை பொலிஸார் சட்டத்திற்கு முரணாக – மக்கள் பார்த்துக்கொண்டிருக்க மூடி மறைக்க மேற்கொண்ட தடய அழிப்பு நடவடிக்கைக்கும் எமது கண்டனத்தைத் தெரிவித்ததுடன் – மக்களும், மாணவர்களும் நீதி கேட்டு ஜனநாயக வழிப் போராட்டங்களை மேற்கொண்டபோது, இராணுவத்தினரும், பொலிஸாரும் அதிகார பாணியில் அடக்க – ஆயுத முனையில் கண்ணீர்புகைக்குண்டுகளையும், துப்பாக்கிப் பிரயோகங்களையும் மேற்கொண்டதோடு குண்டாந்தடிகளாலும் தாக்கியுள்ளனர்.

எனவே, பாதிக்கப்பட்ட மக்களை சரியாக அணுகாமல் படைத்தரப்பும், பொலிஸாரும் பொதுமக்கள் மீது மேற்கொண்ட தாக்குதலுக்கு கண்டனத்தைத் தெரிவித்தோம். அத்துடன் நடந்த சம்பவத்தை விபத்து என்ற வரையறைக்குள் வைத்துப் பார்க்க முடியாது.

ஏனெனில், இலங்கைத்தீவின் எல்லா இடங்களிலும் இராணுவத்தின் காவலரண்களும் இராணுவ வாகனங்களின் போக்குவரத்துக்களும் நடைபெறுகின்றன. ஆனால், அங்கு மக்களை பலியெடுக்கின்ற விபத்துக்கள் நடைபெறுகின்ற வீதத்தை விட – குடாநாட்டில் தொடர்ச்சியாக இராணுவ வாகனங்களால் மக்களும், மாணவர்களும் மோதப்பட்டு கொல்லப்படுகின்ற சம்பவங்கள் அதிகரித்துக் கொண்டே போகின்றன.

இதன் பின்னாலுள்ள பிரச்சினைகளை ஆராயவேண்டும். குறுகிய ஒரு நிலப்பரப்பிற்குள் கூடுதலான இராணுவத்தினர் நிலைகொண்டிருப்பது, கூடுதலான வாகனங்களின் போக்குவரத்து, கட்டுப்பாடற்ற வேகம், தரநிர்ணயத்திற்கு அப்பாற்பட்ட இராணுவ வாகனங்களின் பாவனை, கொல்லப்படுபவர்கள் தமிழர்தானே என்ற மனோபாவ நிலை, இராணுவ சாரதிகளின் அசமந்த நிலை ஆகியனவே இவ்வாறான விபத்துக்களுக்குக் காரணமாய் அமைகின்றன.

எனவே, இந்த விபத்துக்களை நாம் சாதாரணமாகப் பார்க்கமுடியாது.

ஆகவே, ஒப்பந்தத்தின்படி நகர்ப்புறங்களில் இருக்கின்ற – மக்கள் போக்குவரத்துக்கு அவசியமான – தடைசெய்யப்பட்ட பாதைகள் திறக்கப்படவேண்டும். போக்குவரத்துக்குத் தடையாக இருக்கும் காவலரண்கள் அகற்றப்படவேண்டும். மக்கள் போக்குவரத்து நெருக்கமாக உள்ள இடங்களில் கனரகவாகனங்களின் போக்குவரத்து நிறுத்தப்படவேண்டும். விபத்துக்கள் நடைபெறாதிருக்க என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டுமோ அவற்றை மேற்கொள்ளவேண்டும் என வலியுறுத்தியுள்ளோம்.

மக்களுடைய எதிர்ப்பு நடவடிக்கைகள் ஓய்ந்தபின் 40 நிமிடங்கள் கழித்து – இராணுவத்தினரும், பொலிஸாரும் பலாலி வீதியில் அமைந்துள்ள சர்வதேச மாணவர் பேரவை அலுவலகத்தையும், நடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனின் அலுவலகத்தையும் தாக்கியது ஏன்? நேரடியான துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது ஏன்?

வீதியில் வந்துகொண்டிருந்த வயோதிபர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது ஏன்? இது திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட செயல் என்பதோடு, யுத்த நிறுத்த மீறலுமாகும். இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு எந்த விதத்தில் அனுமதி வழங்கப்பட்டது. எனவே, மக்களை பாதிப்பதே இவர்களின் நோக்கமாக இருக்கின்றது.

விடுதலைப் புலிகளின் தூண்டுதலால்தான், மக்கள் இவ்வாறான செயல்களில் ஈடுபட்டதாக இராணுவப் பேச்சாளர் கூறியிருந்தார். இதற்கு வன்மையான கண்டனத்தைத் தெரிவித்ததுடன், அரசியல் பணிபுரியும் எங்களின் எந்தப் போராளிகளும் இந்தச் சம்பவங்களில் எந்தவிதத்திலும் ஈடுபடவில்லைஎன்பதையும் உறுதிப்படுத்தியுள்ளோம்.

இதனை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரும், இராணுவத் தளபதியும் ஏற்றுக்கொண்டனர். ஆனால், இராணுவப் பேச்சாளர் இதனை எந்த அடிப்படையில் கூறியிருந்தார்? எனவே, இது விடுதலைப் புலிகளின் மீது களங்கத்தை ஏற்படுத்துவதாகவே இருக்கின்றது.

பல்கலைக்கழக வாயிலில் கொல்லப்பட்ட 65 வயதுடைய வயோதிபர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட பொலிஸாரின் இலக்கத்தையும் கண்காணிப்புக்குழுவிடம் வழங்கியுள்ளோம். சம்பந்தப்பட்ட பொலிஸாரை அடையாளம் காட்ட முடியும் என்பதனையும் தெரிவித்துள்ளோம்.

இறுதியில் – மக்களை பாதிக்கின்ற, மக்கள் உயிர்களைப் பலியெடுக்கின்ற சம்பவங்களும், விபத்துச் சம்பவங்களும் ஏற்படாமல் தடுக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டோம். தொடர்ச்சியாக இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுமானால், மக்களுடைய உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியாது என்பதனையும் சுட்டிக்காட்டினோம் எனத் தெரிவித்தார்.

## ராணுவ வன்முறைகள்...

10.30 மணியளவில் தொடங்கிய பேச்சுவார்த்தை நண்பகல் 12.45 மணிவரை நீடித்தது.

இந்தச் சந்திப்பில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவிக்கையில் –

போர்நிறுத்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட ஒருதரப்பினர் என்ற வகையில், 1.8 சரத்துப்படி ஆயு தக்குழுக்களின் நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கை எடுக்க – நோர்வே அனுசரணையாளர்கள் தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளவேண்டும் எனத் தெரிவித்தார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அவசர, மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு பொதுக் கட்டமைப்பொன்றை உருவாக்குவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

சமாதானப்பேச்சுக்கள் தற்போது தேக்கநிலை அடைந்துள்ளமை தொடர்பாக நோர்வே தூதுவர் தனது கவலையை வெளியிட்டார்.

இந்தக் கலந்துரையாடலில் விடுதலைப் புலிகள் தரப்பில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையில் – காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை இந்தச் சந்திப்புக் குறித்துக் கருத்து வெளியிட்ட நோர்வேத் தூதுவர், பொதுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவது தொடர்பான அரசாங்கத்தின் திட்டங்கள் எதனையும் தான் கொண்டுவரவில்லை என்றும் அதேசமயம் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பது குறித்து அரசாங்கம் புதிய நிலைப்பாடுகள் எதனையும் அறிவிக்கவில்லை என்பதால் சமாதான முயற்சிகள் குறித்து தற்போது முன்னேற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.


# VACANCY

**TRO invites applications for the following vacancy All applicants shall forward their details with their curriculum vitae on or before 10th March 2005 to the address below.**

**Civil Engineer** - Qualified engineer who have experience in construction work and managing Programmes.

**Director, Disaster Management Unit, Rapid Rehabilitation and Development Services Programme, Tamils Rehabilitation, Organization, Jaffna Road, Kilinochchi**

(3632)



# பணிநிலை வேண்டுகை

தமிழர் புனர்வாழ்வுக் கழக நடுவப்பணியகத்திற்கு கீழ்வரும் பணிநிலைகளுக்கு ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01) பணிநிலை – **திட்டக் கண்காணிப்பு அலுவலர்**

தகைமை:-

- ஆகக் குறைந்தது க.பொ.த (சா/த) சித்தியடைந்திருத்தல்.
- திட்டச் செயற்பாடுகளில் அரச, அரசசார்பற்ற தனியார் நிறுவனங்களில் பணிபுரிந்து முன் அனுபவமும், கணினி அனுபவமும் உடையவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

02) பணிநிலை – **தொழில்நுட்ப அலுவலர்.**

தகைமை:-

- க.பொ.த (உ/த) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
- தொழில்நுட்பத் துறையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் தொழில்நுட்பப் பாடநெறிகளைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.
- தொழில்நுட்பத்துறையில் ஆகக் குறைந்தது 2 வருடங்களாவது முன் அனுபவமுடையவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் 12.03.2005 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாகக் கீழ்காணும் முகவரிக்கு நேரிலோ அல்லது தபாலிலோ அனுப்பிவைக்கவேண்டும்.

**மேலாளர்,**
**ஆளணி நிர்வாகப் பகுதி,**
**தமிழர் புனர்வாழ்வுக் கழகம்,**
**(கந்தசாமி கோவில் அருகாமை)**
**கிளிநொச்சி.**

(3633)


இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 06.03.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.